உ
சிவமயம்
ஓம் கன்னிமூல கணபதிபகவானே
சரணம் ஐயப்பா

# "பம்பா வாசன்"



## வெளியீடு

அகில இலங்கை யாழ் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை
சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்,யாழ்ப்பாணம்.

"சபரீச வாசம்"
ஈழவூர்சைவப்புலவர்,ஜோதிதாஷன்
சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா சாமி (M.A, J.P)
வேரவில் பூநகரி.

29.12.2014

உ
சிவமயம்

ஓம் வெள்ளிப்பள்ளத்து வீரக்திப் பிள்ளையாரே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை தர்மதாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலையானே சரணம் ஐயப்பா
ஓம் சபரீச வாசனே சரணம் ஐயப்பா
ஓம் பூரணா புஸ்கலா சமேத துத்தியில் ஐயனே சரணம் ஐயப்பா







# வெளியீடு

அகில இலங்கை யாழ் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை
சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்,யாழ்ப்பாணம்.
20ஆவது தீர்த்த யாத்திரைக்குழு

# "சபரீச வாசம்"

ஈழவூர்சைவப்புலவர் ஜோதிதாஷன்
சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா சாமி

**29.12.2014**

# பொருளடக்கம்.


01. ஆசியுரைகள்
02. வாழ்த்துரைகள்
03. முன்னுரை
04. சபரிமலை அற்புதங்கள்
வழிபாட்டு முறைகள்
05. விரத விதி
06. சரணக்கோவை
07. ஐயப்பன் கவசம்
08. பிள்ளையார் பாடல்
09. குரு பாடல்கள்
10. சிவன் பாடல்
11. அம்மன் பாடல்கள்
12. முருகன் பாடல்
13. கிருஸ்ணர் பாடல்
14. ஐயப்பன் பாடல்கள்
15. நாகராசா பாடல்கள்
16. ஆஞ்சனேயர் பாடல்
17. கறுப்பன் பாடல்கள்
18. படிப்பாடல்கள்
19. மங்களம்
20. சாஸ்த பஞ்சரத்தினம்
21. நடைசாத்தல்
22. வழிநடைச்சரணம்



"சபரீஷவாசம்"
ஈழவூர் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்,
இந்து தர்மாசிரியர்
சிவஸ்ரீ.கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா MA.JP
Dip in Edu.Management
சிவப்பணிதாசன், ஜோதிதாசன்.அறநெறிக்குரு.
சிவநெறித்தொண்டன், சைவசிரோமணி
சாமஸ்ரீ சிவாகமஜோதி
உலக சைவத்திருச்சபை அமைப்பாளர்-இலங்கை
வேரவில் - பூநகரி




0775835372



உ
சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

அகில இலங்கை யாழ் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை
சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்.யாழ்ப்பாணம்.
தேவஸ்தான அறங்காவலர், பிரதமகுரு.குருசாமி,
**பிரம்ம ஸ்ரீ கி.ஹரிஹரசுத குருக்கள் சாமி,**
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,யாழ்ப்பாணம்.



# ஆசியுரை

*ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே!*
*பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே!!*
*ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி: !!*

ஓம் கடவுள் பரிபூரணப் பொருள், காணும் இந்த உலகமும் பூரணமானது. பூரணமான உலகம் பூரணமான இறைவனிடமிருந்தே வந்துள்ளது. அனைத்து உலகங்களும் தன்னிடமிருந்து வெளிப்பட்டும் பரிபூரணமான கடவுள் குறைவின்றி பரிபூரணராகவே இருக்கிறார். ஓம் தத் ஸத்!

ஈழத் திருநாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ் கோண்டாவில் பதியில் பதினெட்டுப் படிகளோடு மிளிரும் ஆலயம் ஸ்ரீ சபரீச ஐயப்பன் ஆலயம் ஆகும். இங்கு சிறப்பாக பூசைகள் வழிபாடுகள் வேத ஆகம தாந்திரீக முறைப்படி நடைபெற்று வருகின்றன. ஐயப்ப சாமிமார்கள் மாலை அணிந்து சபரிமலை யாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வருடமும் 20ஆவது தீர்த்த யாத்திரைக்குழு செல்ல இருக்கிறது. இவ்வாறு செல்லுகின்ற சாமிமார்களுக்கும் அடியார்களுக்கும் பயன் பெறும் வகையில் ஒவ்வொரு வருடமும் சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் சாமி விரத விதி பஜனைப் பாடலகள்,வரலாறு என்பன அடங்கலாக வெளியீட்டு வருகின்றார். அதே போல இந்த வருடமும் **"பம்பா வாஷன்"** என்னும் மலரினை வெளியீடு செய்கின்றார். இப்புத்தகத்தினை எல்லோரும் பெற்று பயன்அடைய வேண்டும் என கேட்டு கொள்வதோடு நானும் பெரும் மகிழ்ச்சியுடன் ஆசி வழங்குகிறேன்.

இவ் மலரினை வெளியிடுவதற்கு அனுசரனை வழங்கும் அனைவருக்கும் சபரீச ஐயப்பன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தென்னிந்திய பக்திப் பாடகர் குரு மண்டலம் வீரமணிதாஷன் தெய்வீக அருள் மழை பொழியும் இந்நாளில் *(29.12.2014)* வெளியீடு செய்வது ஐயப்பன் திருவருளே ஆகம் என்பதை பெருமகிழ்வுடன் அறியத்தருகிறேன்

இங்கனம்

*கி.ஹரிஹரசுதசிவாச்சாரியார் குருசாமி*



உ
சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# பிரதிஷ்டா பிரதமகுரு
# ஆசியுரை



ஈழத்துச் சபரி மலையாம் கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தான வருடாந்த மகரஜோதி மண்டல விரத மகர மகோற்சவ பெருவிழா வைபவங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாண்டு சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தில் மகரஜோதி மண்டலவிரத, மகோற்சவங்களை நிறைவேற்றுகின்ற அருள் துணையை சுவாமி எனக்கும் வழங்கியிருப்பதையிட்டு ஐயப்பனின் திருவருளை வியந்து கொள்கின்றேன்.

ஈழத்து சபரிமலையில் நடைபெறும் ஒவ்வொரு மங்கள வைபவமும் சிறப்புப் பொருந்தியது. ஆண்டு தோறும் ஐயப்ப தேவஸ்தானத்தில் வேரவில் அருள்மிகு பூர்ணா புஸ்கலா சமேத துத்தியில் ஐயனார் ஆலய தர்மகர்த்தா ஈழவூர் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா சாமி ஐயப்பனின் பெருமைகளை நூலாக வெளியிட்டு பெருமை சேர்ப்பவர்.

இவ்வாண்டும் 'பம்பா வாசன்' எனும் மலர் வெளியிடப் படுகின்றது.அனைவரும் இம்மலரை படித்து பயன்பெறுவீர்களாக.

**'சர்வே ஜனகா சுகினோ பவந்து'**

அருள் ஜோதி ஸ்கந்த சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார். (ஜே. பி)
(அதிபர் சர்வதேச ஸ்ரீ தேவி குருகுல சபரிபீட வேதாகம கலாசாலை)
தர்மகர்த்தா ஆதீன முதல்வர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்,பட்டாணி,
ஆதிவைரவர் துர்க்க தேவஸ்தானம் நாயன்மார் கட்டு.



உ

சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# முன்னுரை



வெள்ளிப்பள்ளத்து வீராகத்திப் பிள்ளையாரே சரணம் ஐயப்பா
பூரணாபுஸ்கலா சமேத அரிஹரபுத்திதுத்தியில்
ஐயனாரே சரணம் ஐயப்பா வீரமாருதியே
சரணம் ஐயப்பா முனியப்பரே சரணம் ஐயப்பா
வீரபத்திரரே சரணம் ஐயப்பா
**என் கண்கண்ட தெய்வங்கள் திருப்பாதங்களைப் போற்றுகின்றேன்.**

சைவசமயம் காலத்தால் முற்பட்ட சமயம் வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறியை போதிப்பவை சமயங்களேயாம். சைவசமயம் வேதம்மோடாகமம் மெய்யாம் இறைநூல். என்பதற்கு அமையவும் புராண இதிகாசங்கள்,திருமுறைகள்,நீதிநூல்கள் என்பவற்றிற்கு மைய சிவனே முழுமுதற்கடவுளாகப் போற்றப்படுகின்றான். அவதாரங்கள் காலத்துக்கு காலம் தோன்றி அசுர குணங்களை ஒடுக்கிய வரலாறுகளை அறிய முடிகின்றது. மகிரிஜியை வதம் செய்ய ஐயப்ப அவதாரம் உதயமாகியது. இவ்வரலாறு இன்று மக்களின் வாழ்வில் முன்னுதாரணமாகின்றது. ஐயப்பன் வரலாறு அறிந்து கொள்ளவும், விரத முறைகளை அறிந்து கொள்ளவும் ஆண்டு தோறும் ஈழத்துச் சபரிமலை கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் நூல் வெளியீடுகளை செய்து வருகின்றது. 20வது தீர்த்த யாத்திரைக் குழு 2014 மகாஜோதிக்கான தீர்த்தயாத்திரையின் போது "பம்பா வாசன்" என்றும் நூலை வெளியிடுவது ஐயப்பன் திருவருளேயாம்.

கார்த்திகை முதலாம் நாள்மாலைஅணிந்து கருங்காவிகட்டி சைவத்தினதும் ஐயப்பனினதும் தூய்மையை ஏனைய மக்களுக்கு உணர்த்தும் தன்மை உடையவர்களாக ஐயப்ப சுவாமிமார்கள் அடியார்கள் அணைவரும் ஐயப்பனின் புனிதத்தையும் சைவசமயத்தின் வாழ்வியல் முறைகளையும் அறிந்து கொள்ளும் வகையாக இம்மலர் அமைகின்றது அணைவரும் இம்மலரினைப் பெற்று ஐயப்பன் வழிபாடுகளை அறிந்து கொள்ள ஐயன் அருள்புரிய வேண்டும் எனப ஐயப்பனைப் பிரார்த்தித்து பம்பாவாசன், என்னும் மலரினை ஈழத்து சபரி மலையான் திருப்பாத கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.

இன்று வீரமணிதாசன் அவர்களின் ஐயப்பன் புகழ்பாடும் நாளில் வெளியீடு செய்வதும் பம்பா வாசன் திருவருளேயாம். இவ்வெளியீட்டுக்கு அனுசரணை புரிந்தவர்கள் இந்நூலை அச்சுப் பதிப்பித்து உதவியவர்கள் இந்நூலினை பெறும் சாமிமார்கள், அடியார்கள் அனைவருக்கும் ஐயன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

**"சபரீசவாசம்"**

ஈழவூர் சைவப்புலவர், ஜோதிதாசன்,
**சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயாசாமி** M.A.JP
சைவசித்தாந்த பண்டிதர்,இந்து
தர்மாசிரியர்,அறிநெறிக்குரு, சைவசிரோமணி,
வேரவில், பூநகரி.

உ
சிவமயம்
ஓம் சாமியே சரணம் ஐயப்பா





# ஆசியுரை

ஓம் ஸஹ நாவவது!
ஸஹ நௌ புனக்து!
ஸஹ வீர்யம் கரவாவஹை!!
தேஜஸ்விநா – வதீதமஸ்து மா வித்விஷாவஹை!!
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி: !!

ஓம் (குரு சிஷ்யர்களாகிய எங்களை) இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும் : சேர்த்துப் போஷிக்கட்டும். இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் ஒளி பொருந்தியது ஆகவேண்டும். (நாங்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளாம லிருக்க வேண்டும். ஓம் முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

ஓம் எல்லோரும் நலமாக வாழ்க! எல்லோரும் நோயின்றி வாழ்க! எல்லோர்க்கும் மங்களம் உண்டாகுக! யாரும் துன்புறாதிருக்கட்டும்! ஓம்.

ஐயப்பன் வழிபாடு சாமிமார்கள் பக்த அடியார்கள் இன்புற்று வாழ வழிகாட்டும் தன்மை தனித்துவமானது. இவற்றை உணர்ந்த குருசாமி பிரதம சிவாச்சாரியார் சி.அரிகரசுதகுருசாமி ஐயா அவர்கள் ஐயருடன் ஊறியவராவார். அவரது நெறிப்படுத்தலில் ஐயப்பசாமிமார்கள் அடியார் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்பின் தொடரவேண்டும். சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயாசாமி M.A JP அவர்கள் ஈழத்துச் சபரிமலையில் 20வது தீர்த்தயாத்திரைக் குழுவினர் அருள்ப் பிரசாதமாக “பம்பா வாசன்” எனும் ஐயப்பன் திருவருள் வெளியீடு வருவது அறிந்து மனமார வாழ்த்துகின்றேன். மேன்மேலும் இப்பணியை ஐயப்பன் திருவருள் துணைகொண்டு வெளிவரவேண்டும் என ஐயப்பனை வேண்டுகின்றேன்.

சாமியே சரணம் ஐயப்பா

பக்த கோடிகளின் கடைக்கூழை
தமிழ்ப்பண்டிதர், B.A. M.A சைவசித்தாந்தம்
சைவப்புலவர், திருவருள், சைவசித்தாந்த பண்டிதர்
வ.ஆ.தங்கமயில்

# World Saiva Mission

*Excellent Service Mission for Humanity*

## உலக சைவத் திருச்சபை

Unity in diversity

1150 Bellamy Road N, Scarborough, Ontario M1H 1H2 Canada
Web: world saiva mission .org Email: shivatempletoronto@ yahoo.ca
(416) 769-7747, Srilanka 0786743302, 0770712459, Bharatham 9842490001






உலக சைவத்திருச்சபைச் தலைவர் குரு ஆசியுடனும்,
உலக சைவத்திருச்சபை சைவத்துறைத் தலைவர்
அடியார் விபுலானந்தா அவர்களின்
ஆசியுடனும் வழங்கும் வாழ்த்துரை



*ஓம் ஸர்வே பவந்து ஸூகின:!*
*ஸர்வே ஸந்து நிராமயா:!*
*ஸர்வே பத்ராணி பச்யந்து!*
*மா கச்சித் துக்கபாக் பவேம்!!*
*ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி: !!*

ஓம் எல்லோரும் நலமாக வாழ்க! எல்லோரும் நோயின்றி வாழ்க! எல்லோர்க்கும் மங்களம் உண்டாகுக! யாரும் துன்புறா திருக்கட்டும்! ஓம்.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

கலியுகத்து கண்கண்ட தெய்வமாக குழந்தை வடிவாக குற்றம் களையும் குணசீலனாக இன்று எல்லோராலும் சரணகோஷத்தினால் கூவி அழைக்கப்படுபவன் சபரிமலை வாசன், சபரிகிரீசன், சாந்த சொரூபன், சற்குணநாதன், குருவின் குருவானவன் சுவாமி ஐயப்பன் ஆவான். அவன் நாமம் புகழ், கீர்த்தி பெறுபவர்கள் அவன் திருவருளை திருவிளையாடல்களை வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் வெளிவருகின்ற "பம்பா வாசன்" எனும் அருள் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதும், இச் சிவப்பணி சிறக்க வாழ்த்துவதும் ஐயன் அருளே ஆகும்.

சாமியே சரணம் ஐய்பா
சைவமணி, சோதிடமணி, யாழ் காரையம்பதி
செல்வசண்முகரட்ணம்
ஆலோசகர்-உலக சைவத்திருச்சபை இலங்கை.



உ
சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா



## ஆசியுரை

# மதுரகவியின் மகர ஜோதிப் பெருவிழா மகத்துவம்.

கலியுகக் காவலனாக அவதரித்து உலக மெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கருணை மூர்த்தியான ஸ்ரீ ஐயப்ப வழிபாடு செய்யும் அடியார்கள் தொகை வளர்ந்து கொண்டே போகின்றது.

சபரி மலையில் பதினெட்டுச் சித்திகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தர்ம சாஸ்தாவான ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் திருவளை வேண்டி ஆண்டுதோறும் மாலை அணிந்து யாத்திரை செய்து ஐயப்ப சுவாமியை பிரார்த்தனை செய்து வருகிறார் கள்.இத்தகு மகத்துவமான சிறப்புக்களை ஆண்டுதோறும் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தில் காணலாம். சரித்திர சிறப்புக்களோடு வீற்றிருக்கும் சபரிமலை யானுக்கு நடைபெற்ற 2014ம் ஆண்டுக்குரிய மகரஜோதிப் பெருவிழா நிறைகிறது.

இந்நிகழ்வுகளுக்கு சான்றாக சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயாசாமி அவர்கள் ஆண்டுதோறும் வெளியீடு செய்து வரும் ஐயப்பன் பெருமைகளை குறித்த மலர் இவ்வாண்டும் பம்பா வாசன் என்ற பெயரில் வெளிவருவதையிட்டு மனநிறைவோடு வாழ்த்துகின்றோன்.

" வையம் வளம் பெற ஐயப்பதரிசனம் நிறையட்டும்"

**வர்ணனைக் கலாநிதி.மதுரகவி,காரை.எம்.பி அருளானந்தன்,**
**பணிப்பாளர்,சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்**
**வானொலி,தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்**
**சைவசமய துறைத் தலைவர்,உலக சைவத்திருச்சபை யாழ்மாவட்டம்.**



உ
சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா



# வாழ்த்துச் செய்தி

கலியுகத் தெய்வம் கருணா மூர்த்தியாக சபரி மலையில் அமர்ந்துள்ள ஐயப்ப பெருமானின் சந்நிதானத்திற்கு வருடா வருடம் பலநாடுகளில் இருந்தும் கார்த்திகை மாதம் பிறந்து விட்டால் கோடிக் கணக்கான ஐயப்ப பக்தர்கள் கூடுகின்றனர்.

இலங்கை யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து சபரீச ஐயப்ப தேவஸ்தானமும் இவ் அளப்பரிய ஆன்மீகப் பணிகளை ஐயப்ப மகரஜோதி மண்டல விரத மாண்பினை பெருக்கி வருகின்றது.சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தை சேர்ந்த சாமிமார்கள் வரிசையில் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயாசாமி ஆண்டுதோறும் மகரஜோதி மகத்துவத்தை யாவரும் அறியும் வகையில் நூல் வெளியீடுகளை நிகழ்த்தி வருகின்றார்.

இவ் வாண்டும் பம்பை வாசன் எனும் சிறப்பு மலரை வெளியீடு செய்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணைவாக ஆசிரியர் அவர்கள் பக்தர்களின் மனங்களில் ஐயப்பன் நிறைந்து நிற்க வேண்டுமென்ற அவாவில் இம்முயற்சியை எடுத்துவருகின்றார்.அவரது முயற்சி மேன் மேலும் பெருக இவ் நூலானது நல்ல பயனைத் தரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அன்பர்கள் அனைவரும் இந்நூலைப் பெற்றுப் பராயணஞ் செய்து சரண கோஷப் பிரியன் ஐயப்பனின் திருவருளினைப் பெற்று எல்லோரும் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

சிவத்திரு முதல்வர் . ந. சத்தியரூபன்
சிறி நதியா நகை மாளிகை
கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.



உ
சிவமயம்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா



# வாழ்த்துரை

உலகத்தில் பிறந்த ஒவ்வொருமனிதனும் தத் தம் விருப்பப்படி இறைவனை பூஜிக்கின்றனர். பூஜிக்கும் தெய்வங்களை கணபதி சக்தி, சிவன், விஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி, கண்ணண், முருகன், அனுமன் என தத்தமக்குத் தெரிந்த பெயரில் கூப்பிட்டு வணங்கி வழி படுகின்றனர். ஆனால் அரிஹரபுத்திரராம் ஸ்ரீதர்மசாஸ்தாவாகிய ஐய்யப்பனை வழிபடும் போது மட்டும் 'ஸ்வாமி' என்ற அடை மொழியுட ன் சேர்த்து வணங்கி வழிபடுகின்றனர். ஈஸ்வரனின் இச்சாசக்தி கிரியா சக்தி ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்து உதித்த மஹாசக்திதான் ஸ்ரீ ஐய்யப்ப ஸ்வாமியாக ஞானஸ்வ ரூபாமாக காட்சியளிக்கின்றான்.

ஐயப்ப வழிபாடு ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியவசிய மாகின்றது. இதனைக்கருத்தில்க் கொண்டு கோண்டாவில் ஈழத்து சபரிமலையான் தேவஸ்தானத்தில் 20ஆவது தீர்த்த யாத்திரைக்குழுவின் வெளியீடாக வரும் பம்பா வாசன் எனும் அருள் நூல் அனைவருக்கும் நல்வழிகாட்டியாக அமைய ஐயப்பனைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் அக மகிழ்வு அடைகின்றேன்.

சாமியே சரணம் ஐய்பா
திருமதி.கு.கமலாதேவி
செயலாளர்
தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம்

## 1. சபரிமலை சென்றுவர மாலை அணியக் கூடாத காலங்கள்...

தந்தை இறந்தால் ஒரு வருட காலமும், தாய் என்றால் ஆறு மாத காலமும், மனைவி என்றால் மூன்று மாத காலமும், சகோதரன் என்றால் ஒன்றரை மாத காலமும், புத்திரன் என்றால் ஒன்றரை மாத காலமும், பங்காளி என்றால் ஒரு மாத காலமும் மலையேறுவதும், சுபகாரியங்கள் செய்வதும் கூடாது, அப்படி செய்ய வேண்டும் என நிர்ப்பந்தம் ஏற்பட்டால் கணபதியை பூஜித்து அன்னதானம் செய்து எல்லாவித சுபகாரியங்களும் செய்யலாம் என அருளிச் செய்த ஸ்ரீ யோகீஸ்வரர் ஏவல்கீய மகிரிஷியின் அருள் வாக்கினையே சபரிமலை ஏறுவதற்கு ஐயப்ப பக்தர்கள் கையாளுதல் உத்தமம். ஏதேனும் தவிர்க்க முடியாத பிரச்சினை என்றால் குருசாமியை கலந்து ஆலோசித்து பின்புதான் யாத்திரை மேற்கொள்ள வேண்டும்.

## 2. இருமுடி கட்டு

மணிகண்டன் என்ற நாமத்துடன் அய்யப்பசாமி பூவுலகில் ராஜசேரன் மன்னன் மகனாக வாழ்ந்த போது புலிப்பால் கொண்டு வரக் காட்டுக்குச் சென்றார். அப்போது குலதெய்வமாகிய சிவபெருமானை துணைக்கு அழைப்பது போல் 3 கண்ணுடைய தேங்காயை எடுத்துக் கொண்டு போகும்படி மணிகண்டனுக்கு மன்னன் ஆலோசனை சொன்னார். ஐயப்பனுக்கு மன்னர் இருமுடிகட்டி உணவுப் பொருட்களை அதில் வைத்து மணிகண்டன் தலையில் வைத்து அனுப்பினார். அவரும் அப்படி செய்தார் அதே பழக்கத்தைத் தான் இப்போது சபரிமலை யாத்திரை செல்வபர்கள் இருமுடி சுமந்து செல்வதன் மூலம் கடைப்பிடித்து வருகிறார்கள். இருமுடியில் ஒருபுறம் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டிய பொருட்கள் மறுபுறம் பக்தனுக்கு தேவையான பொருட்கள், யாத்திரை முடியும்போது அய்யப்பக்தன் தனக்கென்று கொண்டு போன பொருட்களை எல்லாம் காலி செய்து விடுகிறான். ஆண்டவனின்

பதினெட்டு படிகளை கடக்கிறான். ஆண்டவனை நெருங்கும் வரை தான் 'தனது' என்று தேவைப்படுகிறது. நெருங்கியவுடன் நமக்கென்று ஒன்றும் தேவை இல்லை எல்லாம் அவனுக்கே அர்ப்பணம் ஆகிவிடுகிறது என்பது தான் இருமுடியின் தத்துவம்.

## 3. 41 நாட்கள் விரதம்

பரசுராமர் கேரளத்தின் பாதுகாப்பிற்காக ஸ்தாபித்த 108 சாஸ்தா ஆலயங்களில் ஒன்றே சபரிமலை ஆலயம், பந்தளம், கோவிலகம், ரான்னி, கர்த்தாக்காளையும் கடந்து இறுதியில் திருவிதாங்கூர் தேவஸ்ம் போர்டின் அதிகாரத்திற்குட்பட்டுள்ள இந்த ஆலயத்தைக் குறித்து பல்வேறு கதைகள் உண்டு.

நான்கு முறை அக்னி தேவனால் விழுங்கப்பட்ட ஆலயத்தின் தீவிர நம்பிக்கையின் வெளிப்பாடே தற்போதைய ஆலயம், கொல்லம் வருடம் 1029 (கிருத்துவ வருடம் 1853) , 1049 (1873), 1079 (1903) , 1125 ((1949) கால கட்டங்களில் பொன்னம்பல மேட்டின் தலைவனான தர்ம சாஸ்தாவின் ஆலயம் தீக்கிரையானது. 1079 இல் ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா காலத்தில் வெந்து சாம்பலான ஆலயம் போளச்சிறய்க்கல் கொச்சும் மன்னனின் தலைமையில் புணர்நிர்மானம் செய்யப்பட்டது. 1125 இல் மீண்டும் அக்கினித் தாண்டவம், அதன்பின் புணர்நிர்மாணம் செய்யப்பட்டது. தான் தற்போதைய ஆலயம்.

பரசுராமன் பிரதிஷ்டை செய்த சாஸ்தாவின் விக்கிரகத்தில் ஸ்ரீ அய்யப்பன் சென்று ஐக்கியமானார் என்பது ஐதீகம்.

இருமுடி கட்டுடன் சரணம் முழங்கி மலை ஏறும் போது அதன் பொருள் அறிந்து செல்பவர் மிகச் சிலரே. தன் தாய் பந்தள ராணியின் நோய் நீங்க புலிப்பாலுக்காக ஆயத்தம் செய்தது தான் இருமுடிகட்டு. அமைச்சர் தான் அய்யப்பன் மீது காட்டிய வஞ்சனையின் தண்டனையாக 41 நாள் விரதம் மேற்கொண்டது தான் பிற்காலத்தில் 41 நாள் விரதமாக வழக்கத்தில் வந்தது.

# 4. துறவு பூண்ட ஸ்ரீ ஐய்ப்பனுக்கு ஆபரணம் அணிந்த ராஜகோலம்

சபரி மலையில் துறவு பூண்ட யோக நிலையில் ஐயப்பன் எழுந்தருளியிருக்கிறார். அப்படியிருந்தும் மகர விளக்கின் போது பந்தள மகாராஜா அரண்மனையிலிருந்து ஆபரணங்கள் வருவதும், அவை அணி விப்பதும் சிறப்பு பூஜை நிகழ்ச்சிகளாகும்.

துறவியான சுவாமி ஆபரணங்கள் பூண்டு காட்சி தருவதேன்?

ஐயப்பன் தன் அவதார நோக்கத்தின் நிமித்தம் பந்தள நாட்டை விட்டுச் சபரி மலைக்குப் புறப்படும் போது எல்லோரிடமும் தனித்தனியாக விடைபெற்றுக் கொண்டு வந்தார். அவர்களுள் பந்தளநாட்டில் அவருக்குக் குருவாக இருந்த குருவும் ஒருவர் அந்தக் குருவிடம், "சுவாமி, உங்களுக்கு குரு தட்சிணையாக நான் என்ன தரவேண்டும்" என்று கேட்டார். குரு நெகிழ்ந்து போய், "பெருமானே! நீர் எனக்கு இப்பிறவியில் மாணக்கர் என்று கூறும் பேறே எனக்கு குருதட்சணை" என்றார். அவருடைய மனைவியோ ஊமையாகவும், குருடாகவும் இருக்கும் அவர்கள் குழந்தையைக் குணப்படுத்தித் தரவேண்டும் என்று வேண்டினாள். குரு பத்தினியின் கோரிக்கையின்படி அந்தக் குழந்தைக்குப் பிணி நீங்கச் செய்தார் ஐயப்பன்.

அப்பொழுது குருதம் முன் நிற்பது தெய்வம் என்ற உணர்வைக் கடந்து நெகிழச்சியுற்ற நிலையில், "ஐயனே! நீ தங்கமும், ரத்னமும் ஜொலிக்க மகாராஜனாய் இருக்க வேண்டும்" என்று ஆசீர்வதித்து விட்டார்.

எல்லாவற்றையும் கடந்த சுவாமிக்கு ஏன் சுவர்ணரத்ன ஆபரணங் கள் என்ற உணர்வு அந்த குருவுக்கு அப்பொழுது தோன்றவில்லை. எனினும் குருவின் ஆசிதானே! அது பொய்த்து விடக் கூடாதே! அதனால் தான் ஆண்டுக்கு ஒரு முறை மகர விளக்கு விழாவின் போது தை 1 ம் தேதி முதல் 4ம் தேதி வரை சுவாமி பந்தளராஜன் பரம்பரையினர் கொண்டு வரும் ஆயிரம் சவரனுக்கு மேற்பட்ட தங்க ரத்ன ஆபரணங்களை அணிந்து காட்சி தருகிறார் ஸ்ரீ ஐயப்பன்.

## 5. விரதங்களும் அதன் மகத்துவங்களும்

ஐயப்ப விரத முறைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே அகத்திய மாமுனிவரால் வகுத்துத் தரப்பட்டவைகள், என்றாலும் இன்றைய 21ம் ஆம் நூற்றாண்டில் கம்ப்யூட்டர் யுகத்தில் தின வாழ்க்கையில் பல வித டென்ஷன் என்கிற பதட்டமான, நிலையில் பணமிருந்தும் வாழ்க்கையில் சுகமின்றி தினமும் பலவித வியாதிகளோடு நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்கிற மனித குலத்திற்கு அருமருந்தாக இந்த விரதங்கள் அமைந்துள்ளன.

ஐயப்பனின் தரிசனத்திற்கு ஐயப்பன் சன்னிதானத்தை அடைவதற்கு மகத்துவமான 18 படிகளை இருமுடியுடன் ஏறுவதற்கு இந்த விரதங்கள் அவசியாகிறது. ஆசாபாசத்திலிருந்து வேறுபடுத்தி தனித் தன்மை அடையும் வழியாக விரத முறைகளை யோகிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த விரத நாட்களை அகத்திய முனிவர் ஆஷ்டாங்க யோக விதி முறைகளின்படி 90 தினங்கள் விரதம் என ஏற்படுத்தினார். பின்னால் வந்த வில்வ மங்கல சுவாமிகள் 56 நாட்களாகக் குறைத்தார். இன்று நடைமுறையில் 41 நாட்களாக (ஒரு மண்டலமாக) மாறிவிட்டது. (ஒரு மண்டலம் 48 நாட்களாகும்)

விரதங்களை தீவிரமாக கடைப்பிடிக்கும் போது நமது உடலும் உள்ளமும் நல்ல சிந்தனையில் ஒன்றாகும் போது நம்மை நாம் உணர முடிகிறது. நாம் யார், நாம் என்ன செய்கிறோம் என்பதை உணர்ந்து வாழ்க்கை என்ன என்பதை உணர்கிறோம். நமது ஆசாபாசங்களிலிருந்து முழுவதும் அகற்றி உடலையும் உள்ளத்தையும் எல்லா உணர்வுகளிலி ருந்தும் மீட்டு மனதை சாந்த நிலைக்கு விரதங்கள் கொண்டு வருகிறன.

விரத நிலையில் உள்ள நம்முடைய சாந்தியான மனதில் ஹரிஹரபுத்திரனுடைய மோகன ரூபத்தை வைத்துப் பார்த்தால் நம் உள்ளத்தினுள்ளே நாம் என்பதற்கு பதிலாக ஐயப்பனின் உருவமே மனதில் நிறையும். இந்த நிலையை அடையும்போது பரிசுத்தமான சுவாமியாக மாறிவிடுகிறோம். இவ்வாறு காமம், கோபம், விரக்தி, ஆசை, கர்வம் போட்டி பொறாமை போன்றவற்றை நீக்கிய சுவாமியாக ஆகி ஐயப்பனை தரிசிக்கும்போது தான் ஐயப்பனின் பூரண அனுக்ரகம் நமக்கு கிடைக்கும்.

உண்மையாக விரதங்கள் இருந்து 18 படி ஏறுவோர்களையே 18 படி காவல் தெய்வங்களான கடுத்தசாமி, கருப்பசாமிகளும் 18 படிகளில் இருக்கிற காவல் தெய்வங்களாவன 18 தேவதைகளும் நற்பலன்களை நமக்கு அள்ளித் தருவார்கள். விரதங்கள் குறைவாக கடைப்பிடித்தவர் களை இந்த காவல் தெய்வங்கள் தண்டிப்பார்கள். முறையாக பூரண விரதமிருந்து இருமுடியுடன் 18 படிகள் ஏறி தன்னை காணவரும் பக்தனை ஐயப்பன் ஏற்று அந்த பக்தனுக்கு தனது முழு அருளையும் அளிக்கின்றார்.

## 6. ஐயப்ப விரதத்தின் சிறப்பு

(எழுத்தாளர் பாலகுமாரன்)

விரதத்தின் போது உரத்துப் பேசுவது கூடாது, ஆடல் பாடலில் கவனம் செலுத்தக் கூடாது. கும்பலாக உட்கார்ந்து பேசக் கூடாது. விரதத்தின் போது கோயில் கோயிலாகப் போவதில் லாபமில்லை. வெறும் தலைதெறிக்கிற ஓட்டம் தான் அதில் இருக்கிறது. அமைதி குலைகிறது.

விரதம் என்பது மனம் அலையாமல் இருக்க, கண்ட கூத்துக்கள் ஆடாதிருக்க, ஆவேசப்படாதிருக்க, அசூயையோ ஆத்திரமோ ஏற்படாதிருக்க செய்யும் விஷயம். இவை ஏற்படின் விரதம் முடிந்த

போனதாகவே அர்த்தம். ஆவேசப்படுகிற மனதை, அலைகிற மனதை அடக்கி நிறுத்தவே விரதம் என்கிற வைராக்கியம்.

மனம்பாட்டுப்பாட அலையுது வேணாம் பேசாத போ
மனம் சினிமாவுக்கு போன்னு கேட்குது
வேண்டாம் முடியாதுன்னு சொல்லிடு

மனம் கூடுதலா ரெண்டு கை சர்க்கரைப் பொங்கல் சாப்பிட ஆசைப்படுது.

சாப்பிட்டா, தப்பு வரும், வேணாம் விட்டுவிடு

குளித்து, உடம்பை குளிர்வாக்கி சுத்தமாக்கி எங்கேனும் தனியாக அமர்ந்து கொள். சரணம் சொல் ஜபம் செய். உரத்த குரலில் அல்லாமல், முணுமுணுப்பாக அமைதியாக சொல்லாம். தனித்திருந்த சொல்லலாம். சொல்லிக் கொண்டிருக்கும் போதே மனம் என்ன செய்கிறது, எப்படி சொல்கிறது என்று கவனித்து மனதை ஒரு முகப்படுத்த, ஒரே கோட்டில் நிற்கச் செய்கின்ற முயற்சியே விரதத்தின் முக்கிய அங்கம். இதை இடையறாது கடைபிடித்தலே வைராக்கியம். இப்படிச் சீராக விரதமிருப்ப தன் விளைவுகள் என்ன?

நாற்பத்தைந்து நாள் என்பது மிக அற்புதமான விஷயம். உடற் கொதிப்புகள் ஒரு உச்ச நிலைக்குப் போய் மெல்ல தாழும். அதேமாதிரி உணர்ச்சிக் கொந்தளிப்புக்களை மெல்ல அழுத்தி திசை திருப்பி அடக்கி இழுத்துவர நாற்பத்தைந்து நாட்களில் பழகி விட்டால் ஒரு வருடம் முழுக்க எப்படி இருப்பது என்பதும் நமக்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்து விடும், "தெரியாம பண்ணிட்டேன்" என்று அபத்தமாக, விரதமிருப்பவர் பேசமாட்டார். முறையாக விரதம் இருப்பவர் மனவலிமை பெற்று விடுவார். அந்த வலிமை வருகிற போது நல்லதும், தீயதுமாக எதிர்படுபவவற்றை மிக அழகாக கையாளுகிறார். துக்கத்தை ஏற்றுக் கொள்கிறார். சந்தோஷத்தை மிதமாக அனுபவிக்கிறார். பேச்சில் தெளிவு வருகிறது. தெளிவு நம்பிக்கை யாக மாறுகிறது. நம்பிக்கை நாணயத்தை கொடுக்கிறது. நம்பிக்கையும், நாணயஸ்தருமாக ஒரு மனிதர் ஆகும்போது அவருக்கு சுற்றுப்புறத்தில்

நல்ல மரியாதை ஏற்படுகிறது. அந்த மரியாதையை தக்க வைத்துக்கொள்ள மேலும் பலமாக விரதமிருக்க, அந்த விரதத்தின் மகிமையில் பல்வேறு சூட்சுமங்கள் வாழ்க்கையைப் பற்றி அவருக்கு தெரிந்து விடுகின்றன.

"அடடே, கோபம் இங்கேயிருந்து தான் ஆரம்பிக்குதா! தேவையில்லாத இதுக்குத்தான் பொறாமைப்படறேனா? கேலியில ஆரம்பிச்சு, குத்தல்ல நகர்ந்து, கடைசியில சண்டையில் முடியுது. எதுக்கு கேலி?" என்று தெளிவாகி விடுகிறார்.

சினிமாவில் வரும் அழகிகளின் அணிவகுப்பில் மனம் லயிக்காது. இந்தப் பெண் மணிகளால் எனக்கு என்ன புண்ணியம் என்ற கேள்வி வரும். அவர்கள் வேறு நான் வேறு. வெறுமே சந்திப்பதற்குக் கூட எனக்கு விருப்பமில்லை என்ற நிலை ஏற்படும்.

மார்கழியில் மட்டும் விரதமிருக்காமல் மறுபடியும் பங்குனியில் விரதம் இருக்கலாமா, சித்திரையில் விரதமிருக்கலாமா என்றெல்லாம் மனம் கணக்கு போடும், எந்த கோயிலுக்கும் போக வேண்டாம், எந்தப் பயணமும் மேற்கொள்ள வேண்டாம். பதினைந்து நாள் விரதமிருப்போம். உணவைக் குறைப்போம். பேச்சைக் குறைப்போம் என்று விரதத்தின் மீது ஈடுபாடு வரும். தீவிரமாக இப்படி முயல்பவருக்கு, இந்த விரத காலத்து குறைவாகப் பேசுதல், குறைவாக உண்ணுதல், குறைவாகத் தூங்குதல், குளிர்ச்சியாகக் குளிர்த்தல், இடைவிடாது மந்திர ஜபமோ சரணமோ சொல்லுதல் என்பது வருட முழுவதுக்குமாக ஏற்பட்டு விடும்.

அதனால் முகத்திலும், உடம்பிலும் பொலிவு கூடும். சுற்றியுள்ளோர். நடுவில் மரியாதை கூடும். விரதத்தின் மகிமையை உணர்ந்து தாங்களும் கடைப்பிடிக்க முயற்சி செய்வார்கள். உங்களிடம் வழிகாட்டச் சொல்லி நிற்பார்கள். இயல்பாக நீங்கள் குருசாமி ஆகிவிடுவீர்கள். பதினெட்டுமுறை மலைக்குப் போனதாலேயே குருசாமி ஆவதல்ல.

உள்ளுக்குள்ளே ஒளி கூடியிருப்பதால் ஏற்படுகின்ற தன்மையான குருசாமியாக நீங்கள் மாறுவீர்கள்.

குருவாக இருப்பது என்பது அதிகாரமாக இருப்பதல்ல. அன்போடு இருத்தல், அறிவார்ந்த அன்போடு இருத்தல், ஆவேசம் இல்லாமல் அணுகுதல், அது ஒரு ஆனந்தமான நிலை. விரதம் நிச்சயம் இந்த நிலையைக் கொடுக்கும்.

ஒழுங்காக விரதமிருப்பதற்கு நல்ல வைராக்கியம் தேவை. சாமி பாட்டுகூட கேட்கக் கூடாதா?

அவசியம் என்றால் கேளுங்கள், பாட்டும் இல்லாது விரதமிருங்கள். மனம் எல்லா நேரங்களிலும் ஏதோ பாடிய வண்ணம் சிந்தித்துக் கொண்டிருக்கும். உள்ளேயே பாடிக் கொண்டிருக்கும். இப்படியிருப்பின் மனதை ஒருநிலைப்படுத்த முடியாது. பாட்டு, மன ஒருமையை கலைக்கும். மாறி மாறி வெவ்வேறு பாட்டுகளுக்குப் போகும். பாட்டிலும் முழு ஈடுபாடும் ஏற்படாது. அரை நினைவாய் பாடும், ஏதோயே சித்தபடிபாடும். எப்போதும் உள்ளே ஒரு பாட்டு சப்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இது ஆரோக்கியமான மனநிலையல்ல.

விரதம், தியானத்திற்கு அழைத்துப்போக வேண்டும்.தியானம், கடவுளின் தேடலில், தன்னை அறிதலின் ஆரம்பம். எனவே விரதம் என்பது மிகமிக மும்முரமான விஷயம். எந்த இனிப்புக்களும் அங்கே இல்லை. விரதம் கொண்டாட்டமல்ல. பண்டிகைகள் தான் கொண்டாட்டம்.

நீங்கள் மற்றவர் போல் வாழவில்லை, தனித்த வழியிலே இருக்கிறீர்கள் என்பதை சொல்வது தான். உங்களுக்கு நினைவுபடுத்துவது தான் விரதப் பயிற்சி. விரத கால உடையாக கறுப்போ, பச்சையா, காவியோ உடுத்தச் சொல்கிறார்கள். பிறகு, அந்த உடையை கும்மாளம் போட பயன்படுத்தலாமா?

விரதமிருப்பது மிக கம்பீரமான விஷயம். வருடத்தில் நாற்பத்தைந்து நாட்கள் விரத வாழ்க்கை வாழ்வது, மற்ற நாட்களை நிச்சயம் புனிதப்படுத்தும், தெளிவு கொடுக்கும்.

வருடா வருடம் விரதமிருக்க, உங்கள் தன்மை மேம்படும். ஆனால், நாலு நாட்கள் மாலைபோடுவது எந்த வகையிலும் நியாயமில்லை. அது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளும் செயல். 'செய்வன திருந்தச் செய்' என்பது நல்லோர் வாக்கு. உங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துப் போகாத செயல்களைச் செய்வதில் அர்த்தம் என்ன? நேர்மையான விரதம் நிச்சயம் உங்களுக்கு சீர்மையான வாழ்க்கையை கொண்டுவந்து தரும்.

(நன்றி : தினகரன் வாரமலர்)

## 7. இன்றைய ஐயப்ப பக்தர்கள் கடைப்பிடிக்கும் விரத முறைகள்

சமீப காலமாக சபரிமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை லட்சங்களிலிருந்து 2 கோடி அளவில் பெருகியிருக்கிறது. ஆனால், சுவாமிகள் கடைப்பிடிக்கும் விரத முறைகள், யாத்திரையிலும் , சபரிமலையிலும் பக்தர்கள் நடந்து கொள்ளும் விதம் வேதனையளிக்கிறது.

30 வருடங்களுக்கு முன்பிருந்து 7 பஸ்களில் ஈரோட்டிலிருந்து நாங்கள் சபரிமலைக்கு சென்று வருகிறோம். இருமுடி சாமான்கள் தனி பொட்டலமாக நாங்களே தயார் செய்வோம். எங்கள் இருமடி தேங்காய்களை நாங்களே தேய்த்து சுத்தம் செய்வோம். எருமேலியில் சமைத்து உண்டு 48 மைல் நடந்து வந்து பம்பையில் சக்தி பூஜை செய்து 1 நாள் தங்கி தான் மேலே வருவோம். கண்டிப்பாக அனைவரும் 60 நாள் விரதம், நாளுக்கு இருமறை பஜனை என்பது இருக்கும். சபரிமலையில் கூட்டமாக கற்பூரத்தட்டுடன் பேரீட்சை, காணிக்கை பணம், கற்கண்டு

முதலானவற்றுடன் கற்பூர ஆழி எடுத்து பன்னீர் தெளித்துக் கொண்டே ஐயன் ஐயப்பன், கருப்பண்ணசாமி, கடுத்தசாமி, வாபர், மஞ்சமாதா என கற்பூர தீபம் காட்டி, ஊதுபத்தியுடன் அந்தந்த சுவாமிகளுக்கு அந்தந்த காணிக்கை பூஜை முறைப்படி செய்து வந்து 1 நாள் முழுவதும் சன்னி தானத்தில் தங்கி இருந்து, பிறகு இறங்கி வருவோம். குருசாமி தன் கைப் பணத்தை செலவளிப்பார். பக்தர்களிடம் தனியாக வசூல் செய்யமாட்டார்.

ஆனால், இன்று பஸ்ஸில், வேனில் அழைத்து வரும் பெரும்பாலான குருசாமிகள் பணம் சம்பாதிக்கும் . குரசாமிகளாக மாறிவிட்டனர். பஸ்ஸிற்கு 4 ஆள் குறைந்தால் பஸ் புறப்படும். சமயம் கூட 4 பேருக்கு மாலைபோட்டு இருமுடி கட்டி பஸ் மூலம் வருமானம் சம்பாதிக்கிறார்கள். இன்று கடையில் 10 ரூபாய், 20 ரூபாய்க்கு பூஜை சாமான் பாக்கெட்டுகள் விற்கிறார்கள். கடைக்காரரே தேங்காயை பேருக்கு தேய்த்து காசு பார்க்கிறார். இத்தகைய பூஜா ஸ்டோஸ்களில் வாங்கப்படும் தேன் பாட்டில், பன்னீர் பாட்டில் போன்றவை ஒவ்வொன்றும் தரமற்றதாக உள்ளது. 1 ரூபாய் தேன் பாட்லில் என்ன வகை தேன் இருக்கும்? 1 ரூபாய் பன்னீர் பாட்டிலில் இருக்கும் பன்னீர் பாட்டிலில் இருக்கும் பன்னீர் என்ன தரத்தில் இருக்கும்? இத்தகைய சாமான்களை ஐயப்பனுக்கு படைப்பதைவிட பேசாமல் சாமி கும்பிட்டு விட்டு வந்துவிடலாம். ஐயப்பனை ஏமாற்றிக் கொள்கிறார்கள். சிலர் இந்த பூஜா பாக்கெட்டுக்களை சபரிமலையில் பிரிக்காமலேயே வீட்டிற்கு கொண்டு வருகிறார்கள். என்ன கொடுமை இது?

தற்சமய அவசர சாமிகள் காலையில் தங்கள் ஊரில் இருமுடி கட்டுகிறார்கள். இரவு சபரிமலை வந்து 18 படி ஏறியவுடன் தங்கள் இருமுடி கட்டைப் பிரித்து நெய் பாத்திரத்தில் ஊற்றிய மறுநிமிடமே கீழே இறங்க ஆரம்பித்து விடுகிறார்கள். கேட்டால் தாங்கள் அன்று இரவே குற்றாலம் போக வேண்டும், கன்னியாகுமாரி போக வேண்டும், வேறு நாடுகளுக்கு போக வேண்டும். வேன் தின வாடகை பேசியுள்ளேம் என்று பம்பைக்கு

ஓடுகிறார்கள். அவர்களது நெய்யை குருசாமியோ அல்லது வேறு ஒரு நபரையோ மறுநாள் ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்ய சொல்லிவிட்டு அனைவரும் ஊருக்கு திரும்புகிறார்கள். வாவர், கடுத்தசாமி, மஞ்சமாதாவிற்கு கற்பூர ஆழி எடுத்து செல்வ தெல்லாம் மிகக் குறைந்து விட்டது. தற்சமய அவசர கம்ப்யூட்டர் யுகத்தில் சபரிமலையையும், திருப்பதி, பழனி சென்று வருவது போல் ஆக்கிவிட்டனர்.

உண்மையில் 48 நாள் விரதம், 48 மைல் கூட்டு வழிப்பயணம், தினம் ஐயப்பனை நினைந்து பூஜை, அவன் நினைவாகவே 48 நாள் இருத்தல், இதுதான் ஐயப்பனுடைய பூரண அருளைப் பெற வழிகள். இப்படி இருக்கின்ற சுவாமிகளுக்குத்தான் ஐயப்பன் வாழ்வில் ஒரு திருப்பத்தை உண்டாக்குவான். நானும் சபரிமலை சென்று வந்தேன் என்று புகழ்கின்றனர். மாலை அணிந்து 3 நாள் விரதத்தில் சன்னிதானம் வந்துவிட்டு சபரிமலை பயணம் செய்கிற டூரிஸ்ட் சுவாமிகள் தங்களையே ஏமாற்றிக் கொள்கின்றனர்.

தற்சமயம் மண்டல மகர காலத்தில் சபரிமலையில் எங்கு பார்த்தாலும் ஸ்பெஷல் ஆர்மி போலீஸ்கள், போலீஸ் செக்கிங், பாம்ஸ்குவாட் நிறுத்தி பயமுறுத்தல் என பக்தர்களுக்கு பயமான சூழ்நிலையே உண்டாகி விடுகிறது. மாத பூஜையில் சாமி கும்பிடும் நிம்மதி, கூட்ட நெரிசல் காலத்தில் ஏற்படுவதில்லை.

நல்ல நெரிசலான பக்தர் கூட்டம் உள்ள டிசம்பர் 30 முதல் ஜனவரி 4 வரை, ஜனவரி 10 முதல் 15 வரை உள்ள நாட்களில் பக்தர்கள் இருமுடி பிரிக்கும் அரிசியையும், தேங்காய்களையும் சன்னிதான வெட்டவெளியில் போட்டுவிட்டு செல்வதால் அது ஒருமலை போல் குவிந்து கிடக்கிறது. அதை சில சாமிகள் மிதித்து நடந்து செல்வதைப் பார்க்கும்போது மிகுந்த மனவேதனை உண்டாகிறது. அரிசி தேங்காயை திரும்ப எடுத்துச் செல்வதை சுமையாக கருதுகிறார்கள்.

இந்த வருஷம் (2011) நெய் அபிஷேக முறையை சபரிமலையில் தேவஸ்தான நிர்வாகத்தினர் மாறுதல் செய்கின்றனர். இந்த முறையால் பக்தர்கள் சுவாமி கும்பிட்ட மறுநிமிஷம் ஊர் திரும்புவது போன்ற நிலை உண்டாகிவிடும். கூட்டம் அதிகம் ஆக ஆக உண்மையான வழிபாடு குறைகிறது.

## 8. காணிக்கைகள் யார் யாருக்கு செலுத்த வேண்டும்

அய்யப்பனைக் காணச் செல்லும் "சாமிகள்" இருமுடியில் மஞ்சள், பன்னீர், தேன். அவல் பொரி, கல்கண்டு, நெய், தேங்காய், உப்பு, மிளகு, ஊதுபத்தி, சாம்பிராணி போன்ற பல்வேறு பொருட்களை எடுத்துச் செல்வார்கள்.

நெய் அய்யன் அபிஷேகத்திற்கும், தேங்காய் அக்னி குண்டத்திற்கும், அவல்பொறி, கல்கண்டை கடுத்த சாமிக்கும் காணிக்கையாக செலுத்த வேண்டும். மஞ்சள், குங்குமம், வளையல், சாம்பிராணி, கற்பூரம், மஞ்சள் ஜாக்கெட் துணி ஆகியவை மஞ்சமாதவுக்கு உரியவை.

பதினெட்டு படிகளுக்கு எதிரே இருக்கும் வாவர் நடையில் உப்பு, மிளகு, அவல், ஊதுபத்தி, சாம்பிராணி ஆகியவற்றை காணிக்கையாக வழங்க வேண்டும்.

பராசக்தி, மணிமண்டபம், நவக்கிரகம், மஞ்சமாதா சந்நிதிகளில் மஞ்சள்பொடி தூவ வேண்டும். நாகராஜா சந்நிதியில் பன்னீர் தெளிக்க வேண்டும்.

முன்முடியில் கொண்டு செல்லும் அரிசியை சந்நிதானம் அருகே சமையல் செய்து அன்னதானமாக வழங்கலாம். தரிசனம் முடிந்து திரும்பும்போது சிறிதளவு அரிசியை மீதம் கொண்டு வரவேண்டும். அதில் அபிஷேகம் செய்த நெய் கலந்த பொங்கல் சமைத்து வீட்டில் அய்யப்பனுக்கு நிவேதனம் செய்ய வேண்டும். அதையே பிரசாதமாக உண்ணுவதுடன், அக்கம்பக்கத்தினருக்கும் கொடுக்க வேண்டும்.

## 9. சபரிமலை

மஹிஷியை வதம் செய்து இந்திரனை ஸிம்மாகவும், தேவர்களைப் புகலிக்கூட்டமாகவும் கொண்டு ஐயப்பன் நாடு திரும்பினான்.

வழியில் உள்ள ஒரு மலையில் சாபத்தால் கிழரூபம் அடைந்த "சபரி" என்ற வேடுவஸ்திரீ, தவம் செய்து கொண்டிருந்தாள். ஸிம்மத்தின் மீது வந்த மணிகண்டனை அவள் உபசரிக்கவே அவளையும், அவள் சாபத்தையும் அறிந்திருந்த ஐயன் அவளுடைய சாபத்தை நிவர்த்தி செய்து தேவலோகம் செல்லும்படி அருளினார். தன்சாபம் எந்த மலையில் நிவர்த்தியாயிற்றோ அந்தமலை தன் பெயரால் வழங்கவேண்டும் என்றும், அம்மலையை அடையும் மானிடர்கள் பிறவி என்னும் சாபத்திலிருந்து விடுபட வேண்டும் என்றும் பிரார்த்தித்து, பதினெட்டுப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்தாள். பதினெட்டுப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்தாள். மணிகண்டனும், வித்யாதரமங்கை தன்னை பதினெட்டு முறை வணங்கியதால் பதினெட்டு சித்திகளையும், பதினெட்டு படிகளாக அமைத்து கோவில் கொள்ளுவதாகவும், ஒவ்வொரு வருடமும் தன்னைத் தரிசிக்க வருபவர்கள் ஒவ்வொரு சித்தியையும் அடைந்து பதினெட்டு வருடங்கள் தரித்தவர் சித்த புருஷர்களான முழு மனிதர்களாவார் என்றும்,

அதற்காகச் செய்ய வேண்டிய தவத்தை தானே அங்கு செய்வதாயும் வாக்களித்து, பந்தளதேசத்திற்குப் புலிக்கூட்டத்துடன் வந்து சேர்ந்தார் ஐயப்பன்.

கேரள மாநிலம் பந்தனம் திட்டம் மாவட்டத்தில், பந்தனம் திட்டையிலிருந்து 65 கி.மீ தொலைவில் சபரிமலை அமைந்துள்ளது. 65 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் அருகில் மாளிகைப்புரத்தம்மன், கன்னிமூல கணபதி,, வாவர்சுவாமி, கடுத்தசுவாமி ஆகிய துணை தெய்வங்களும் உண்டு.

மகிஷி என்ற பெயர் கொண்ட அசுரபலம் கொண்ட அரக்கியைக் கொன்றபிறகு சுவாமி ஐயப்பன் தியானம் செய்த இடமே சபரிமலை எனக் கூறப்படுகிறது. பதினெட்டு மலைகளுக்கு இடையே ஒரு மலை உச்சியில் சுவாமி ஐயப்பன் கோயில் இருக்கிறது.

சபரி மலையைச் சூழவுள்ள ஒவ்வொரு மலையிலும் கோயில்கள் உண்டு . இதர மலைகளில் பழங்காலத்துக் கோயில்களில் எஞ்சிய பாகங்கள் காணப்படுகின்றன. சபரிமலையைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு மலையிலும் கோயில்கள் உண்டு. நிலக்கல், காளகெட்டி, மற்றும் கரிமலை போன்ற இடங்களில் இன்றும் நாம் நடைமுறை சார்ந்த மற்றும் குறைபடாத கோயில்களைக் காணலாம். இதர மலைகளில் பழங்காலத்துக் கோயில்களில் எஞ்சிய பாகங்கள் காணப்படுகின்றன.



## 10. ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்த நோய் நிவாரணி நெய்யின் தனி சிறப்பு (வரலாற்று மகத்துவம்)

ஐயப்பனுடைய அவதாரத்தில் பந்தள நாட்டில் மணிகண்டனாக வளர்ந்து வரும்போது அனைவரும் ஆனந்தத்தில் இருக்க அந்நாட்டு மந்திரி மட்டும் மணிகண்டன் பந்தள மன்னனாக முடிசூடி விடுவானோ என்கிற பயம் ஏற்பட்டு மணிகண்டனை கொல்ல பல சூழ்ச்சிகள் செய்தான். இதன்படி வரவழைத்து அவர்கள் மூலம் மணிகண்டன் மீது அபிசாரப் பிரயோகம் செய்வித்தான்.

அந்த பிரயோகத்தின் பலனாக மணிகண்டனின் உடலில் பல புண்கள் (கட்டி கொப்புளங்கள்) தோன்றின. மணிகண்டன் படுக்கையில் விழுந்தான். நோய் வாட்டியது மன்னன் பதறிப்போய் அரண்மனை மருத்துவர்களை அழைத்து மைந்தனின் பிணி தீர்க்க வேண்டினான். ஆனால் மந்திரி அந்த வைத்தியர்களை நயத்தாலும், பயத்தாலும் மிரட்டி ஏதும் செய்யாமல் இருக்கச் செய்தான். மனமுடைந்த மன்னன் பூஜை அறையிலேயே அமர்ந்து பரமசிவனிடம் முறையிட்டான். மன்னனது பிரார்த்தனை கைலாயத்தை எட்டியது.

மைந்தனது துயர் தீர்க்க ஈஸ்வரன் கைலயங்களிலிருந்து புறப்பட்டு பந்தளத்தை அடைந்து, தன்வந்திரி வேடத்தில் பந்தள மன்னனைக் கண்டு மணிகண்டனின் நோயை திர்ப்பதாகக் கூறினார். சிவபெருமானாகிய தன்வந்திரி மணிகண்டனை தனிமையில் ஏகாந்தமாக சந்தித்து தனது மகனாகிய மணிகண்டனை ஆரத்தழுவினார். அந்த வைத்தியநாதனின் தழுவலால் மணிகண்டனின் நோய் யாவும் தீர்ந்தது. ஈசன் அந்த நோயை மணிகண்டன் மீது ஏவி விட்டவர் மீதே பிரயோகித்தார்.

சிவபெருமான் தன் மைந்தன் மணிகண்டனிடம் "மைந்தா! இனி உன்னை எந்தவித தீய சக்தியும் கட்டுப்படுத்தாது. உன்னைத் தொட்டவர்

எவராயினும் அவர் அந்த நோயினால் வாடுபவராயிருந்தாலும் உன் ஸ்பரிச மகிமையால் அவர்களது பிணி நீங்கிவிடும்." என்று கூறி மணிகண்டனை ஆசீர்வதித்து மறைந்தார். அன்று முதல் மணிகண்டனான ஐயப்பனைத் தொட்டவர், ஐயப்பன் மேல் பட்ட எந்த திரவங்கள், அபிஷேக நெய் ஆகியவற்றை உபயோகிப்பவர் எல்லாவித வியாதிகளிலிருந்தும் விடுபட்டனர். ஆகையால், இன்று அய்யப்பனுக்கு நெய் அபிஷேகம் ஒரு முக்கிய வழிபாடாக கருதப்பட்டு அபிஷேக நெய்யைப் பக்தர்கள் தங்கள் வீட்டில் சர்வரோக நிவாரணியாக உபயோகப்படுத்துகின்றனர்.

## 11. மனித மனநிலையில்<br>18 படிகள் உணர்த்தும் தத்துவம்

**காமம்** : பற்று உண்டானால் பாசம், மோகம், ஏற்பட்டு புத்தி நாசமடைந்து அழிவு ஏற்படுகிறது.

**குரோதம்** : கோபம் குடியைக் கெடுத்து, கொண்டவனையும் அவன் சுற்றத்தையும் சேர்த்து அழித்து விடும்.

**லோபம்** : பேராசைக்கு இடம் கொடுத்தால் இருப்பதும் போய்விடும். ஆண்டவனை அடைய முடியாது.

**மதம்** : யானைக்கு மதம் பிடித்தால் ஊரையே அழித்துவிடும். அந்த யானையை அப்போது யாராவது விரும்புவார்களா? அதுபோல் வெறி பிடித்தவனை ஆண்டவன் வெறுத்து விடுவான்.

**மாத்ஸர்யம்** : மனதில் பொறாமையை நிலை நிறுத்தி வாழ்பவனுக்கு வேறு பகையே வேண்டாம். அதுவே அவனை அழித்துவிடும்.

**டம்பம்** : அசுர குணமானது நமக்குள் இருக்கக் கூடாது. (வீண் பெருமை)

**அகந்தை** : தான் என்ற அகந்தை கொண்டவன் ஒருபோதும்

வாழ்வில் முன்னேற முடியாது. அகந்தை என்பது முடிவில்லா ஒரு சோகச் சுமை.

**சாதவீகம்** : விருப்பு, வெறுப்பு இன்றி கர்மம் செய்தல் வேண்டும்.

**ராஜஸம்** : அகங்காரத்தோடு கருமம் செய்தல் கூடாது.

**தாமஸம்** : அற்ப புத்தியை பற்றி நிற்பது, மதி மயக்கத்தால் வினை செய்வது.

**ஞானம்** : எல்லாம் ஆண்டவன் செயல் என்று அறியும் பேரறிவு.

**மனம்** : நம்மனம் கெடாது, பிறர் மனம் வருந்தாது வாழ வேண்டும். எப்போதும் ஐயன் நினைவே மனதில் இருக்க வேண்டும்.

**அஞ்ஞானம்** : உண்மைப் பொருளை அறிய மாட்டாது மூடி நிற்கும் இருள்.

**கண்** : ஆண்டவனைப் பார்க்கவும், ஆனந்தக் கண்ணீர் உகுக்கவுமே ஏற்பட்டது.

**காது** : ஆண்டவனின் மேலான குணங்களைக் கேட்டு, அந்த ஆனந்தக் கடலில் மூழ்க வேண்டும்.

**மூக்கு** : ஆண்டவனின் சன்னதியிலிருந்து வரும் நறுமணத்தை முகர வேண்டும்.

**நாக்கு** : கடுஞ்சொற்கள் பேசக் கூடாது.

**மெய்** : இரு கரங்களால் இறைவனை கைகூப்பித் தொழ வேண்டும். கால்களால் ஆண்டவன் சன்னதிக்கு நடந்து செல்ல வேண்டும். உடல் பூமியில் படும்படி விழுந்து ஆண்டவனை நமஸ்கரிக்க வேண்டும்.

இந்தப் பதினெட்டு வித குணங்களில் நல்லவற்றைப் பின்பற்றியும், தீயவற்றைக் களைந்தும் வாழ்க்கைப்படியில் ஏறிச் சென்றால்தான் இறைவன் அருள் நமக்குக் கிடைக்கும். இவையே சபரிமலை தர்மசாஸ்தா வின் பதினெட்டுப் படிகள் உணர்த்தும் தத்துவம்.

## 12. பதினெட்டுப்படிகளின் தாத்பரியம்

**முதல்படி** : விஷாத யோகம். பிறப்பு நிலையற்றது. நாம் செய்யும் நல்லவையும், கெட்டவையுமே நம் புண்ணிய, பாவங்களை நிர்ணயிக்கும் என்று உணர வேண்டும். இறைவன் அருளால் முத்தியடைய வேண்டும் என்ற ஆத்மத் துடிப்பே விஷாத யோகம், இதுவே முதல்படி

**இரண்டாம் படி**: சாங்கிய யோகம் "பரமாத்தாவே என் குரு" என்பதை உணர்ந்து அவரிடம் ஆத்ம உபதேசம் பெறுவது இரண்டாவது படி.

**மூன்றாவது படி** : கர்மயோகம், உபதேசம் பெற்றால் போதுமா? மனம் பக்குவம் அடைய வேண்டாமா? பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்யும் பக்குவம் மூன்றாம் படி.

**நான்காம் படி** : ஞான கர்ம சன்னியாச யோகம், பாவம், புண்ணியங்கள், பற்றிக்கூட கவலைப்படாமல் எதன் மீதும் பற்று இல்லாமல், பரமனை அடையும் வழியில் முன்னேறுவது நான்காம்படி.

**ஐந்தாம்படி** : சன்னியாச யோகம், நான் உயர்ந்தவன் என்ற கர்வம் இல்லாமல் தான, தர்மங்கள் செய்வது ஐந்தாம்படி.

**ஆறாம்படி** : தியாக யோகம், கடவுளை அடைய புலனடக்கம் முக்கியம். மெய், வாய். கண், மூக்கு, செவி இந்த புலன் கள் நம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமே தவிர அவை இழுத்த இழுப்புக்கு நாம் போய்விடக் கூடாது. இதுவே ஆறாவது படி.

**ஏழாவது படி** : ஞானம், இந்த உலகில் காண்பவை எல்லாமே பிரமமம் தான். எல்லாமே கடவுள் தான் என உணர்ந்து ஏழாம்படி.

**எட்டாம் படி** . அட்சர பிரம்ம யோகம், எந்த நேரமும் இறைவனைப்

பற்றிய நினைப்புடன் வேறு சிந்தனைகளே இல்லாமல் இருப்பது எட்டாவது படி.

**ஒன்பதாம் படி :** ராஜவித்ய, ராஜ குஹ்ய யோகம், கடவுள் பக்தி மட்டுமே இருந்தால் பயனில்லை. சமூகத் தொண்டாற்றி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதுதான் உண்மையான பக்தி. உண்மையான ஆன்மிகம் என்று உணர்வது ஒன்பதாம்படி.

**பத்தாம்படி :** விபூதி யோகம், அழகு, அறிவு, ஆற்றல் என எத்தகைய தெய்வீக குணத்தைக் கண்டாலும் அதை இறைவனா கவே காண்பது பத்தாம்படி.

**பதினொன்றாம்படி :** விஸ்வரூப தரிசன யோகம். ஆண்டவனின் உலகத்தை யும் உலகில் ஆண்டவனையும் பார்க்கும் மனப்பக்கு வத்தை வளர்த்துக் கொள்வது பதினொன்றாம்படி.

**பன்னிரண்டாம்படி :** பக்தி யோகம், இன்பம் – துன்பம், விருப்பு – வெறுப்பு. ஏழை – பணக்காரன் என்பன போன்ற வேறுபாடுகளைக் களைந்து எல்லாவற்றிலும் சமத்துவத்தை விரும்புவது பன்னிரண்டாம்படி.

**பதின்மூன்றாம்படி :** ஷேத்ரக்ஞ விபாக யோகம், எல்லா உயிர்களிலும் வீற்றிருந்த ஆண்டவனே அவர்களை இயக்குகிறார் என்பதை உணர்தல் பதின்மூன்றாம்படி.

**பதினான்காம்படி :** குணத்ர விபாக யோகம், பிறப்பு, இறப்பு, மூப்பு ஆகியவற் றால் ஏற்படும் துன்பங்களை அகற்றி, இறைவனின் முழு அருளுக்கு பாத்திரமாவதே பதினான்காம்படி.

**பதினைந்தாம்படி :** தெய்வாசுர விபாக யோகம், தீய குணங்களை ஒழித்து, நல்ல குணங்களை மட்டும் வளர்த்துக் கொண்டு நம்மி டம் தெய்வாம்சத்தை அதிகரிப்பது பதினைந்தாம் படி.

**பதினாறாம்படி :** சம்பத் விபாக யோகம். இறைவன் படைப்பில் எல்லோரும்

சமம் என்று உணர்ந்து, அகங்காரம் வராமல் கவனமுடன் இருப்பது பதினாறாம் படி.

**பதினேழாம்படி :** சிரித்தாத்ரய விபாக யோகம். 'சர்வம் பிரம்ம மயம்' என்று உணர்ந்து பரப்பிரம்ம ஞானத்தை பெறுவது பதினேழாவது படி.

**பதினெட்டாம்படி:** மோட்ச சன்யாச யோகம், யாரிடமும் எந்த உயிர்களிடமும் பேதம் பார்க்காமல், 'உன்னையே சரணாகதி அடைகிறேன்' என்று இறைவன் சன்னதியில் வீழ்ந்தால் அவன் அருள் செய்வான் என்று ஆண்டவனையே சரணடைவது பதினெட்டாவது படி.

சத்தியம் நிறைந்த இந்தப் பொன்னு பதினெட்டுப் படிகளையும் படிப்படியாய் கடந்து வந்தால், நம் கண் எதிரே அந்த கரிமலை வாசன் மணிகண்ட பிரபு பேரொளியாய் தரிசனம் தருவார். நம் வாழ்வுக்கு வளம் சேர்ப்பார் என்பதே ஐயனின் பதினெட்டுப் படிகள் நமக்கு உணர்த்தும் தத்துவமாகும்.

## பொன்னம்பல தரிசனம் பொன்னம்பல மேட்டில் பந்தள மன்னன் கண்ட காட்சி

*ஸ்ரீ கூ.மு. முத்துஸ்வாமி சாஸ்திரிகள் எழுதிய ஸ்ரீ பூதநாத சரிதம் 41–42வது ஸ்லோகத்தில் (இது ஸ்ரீ சாஸ்தா மஹாத்ம்யம், மே – ஜூன் 1911 இதழ்களில் வெளியானது) கீழ்க்கண்ட நிகழ்ச்சியை வருணித்துள்ளார்.*

சபரிமலையில் கோயில் நிர்மாணிக்க மன்னன் அளவற்ற படைவீரர்களுடனும், சிற்பிகளுடனும் சென்ற சபரிமலையில் மைந்தினின் (மணிகண்டரின்) பாணம் பாய்ந்த பெரிய விருக்ஷத்தை (சரங்குத்தி) அடைந்து உறங்கும்போது வாபர் மன்னனை தட்டி எழுப்பி, "ஹேராஜன்! நான் பொன்னம்பலத்தில் உறைந்துள்ள பூதநாத ஸ்வாமியின் சேவகன்.

உங்களை வணங்குகின்றேன். என் பெயர் வாபரன். உங்களை அங்கு அழைத்து வருமாறு ஐயனின் கட்டளை. உமது பரிவாரத்திலுள்ளளோர் கண் விழிப்பதற்குள் திரும்பி வந்துவிடலாம் புறப்படுங்கள்" என்றான். அந்த வார்த்தைகளைக் கேட்ட அரசன் மிகவும் மனமகிழ்வெய்தி, விரைந்து வாபரனுடன் சென்று பொன்னம்பலத்தை அடைந்தான். அங்கு அவன் கண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கோடி சூரியப் பிரகாசத்துடன் சுடர்விடும் மணிகண்டனை தேவர்களும், ரிஷிகளும் போற்றிய வண்ணமிருந்தனர். நவரத்தினங்கள், பதிக்கப் பெற்ற பொன்மயமான சிம்மாசனத்தில் சக்கரவர்த்தி போல் அமர்ந்திருந்தார் அய்யப்பன். அந்த ஞானபீடத்தின் கீழ் படிக்கட்டுகள் போல் கண் சிமிட்டிய வண்ணம் பதினெட்டு தேவதைகள் படுத்திருந்தனர். இவை அனைத்தையும் ஞானக் கண்ணால் பந்தளத்தோன் கண்டுகளித்தான். வேதவேத்யனான அய்யன் இருக்குமிடத்தில் ஸ்த்திய, தர்மங்கள் துவாரபாலகர்களாய் வீற்றிருந்தனர். உளத்தூய்மை, கடவுள் நம்பிக்கை, சமநோக்கு, கருணை, உறுதி , நட்பு, சந்தோஷம், புலனடக்கம் முதலிய எட்டு தருமங்கள் மேற்கூறிய ஸ்த்திய தருமங்களில் பதினெட்டு தத்துவங்கள் தேவர்கள் வடிவில் படிக்கட்டுக்களாய் மின்னுகின்றன.

அய்யப்பன், பந்தள மன்னனைப் பார்த்து, "நீங்கள் எனது இந்தத் தோற்றத்தைக் கண்டு ஆனந்தம் எய்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் உம்மை இங்கு வரவழைத்தோம். பட்ட பந்தவடிவம் பூண்டு, சின் முத்திரை, ஆனந்த முத்திரை இவைகளுடன் என்னை இங்கு கண்ட கோலத்திலேயே சபரிமலையில் பிரதிஷ்டை செய்யுங்கள். பதினெட்டு தேவதைகள் இங்குள்ளதைப் போல் அங்கும் அந்தப் பதினெட்டு தேவதைகளின் வடிவில் பதினெட்டுப் படிகளைக் கட்டவும். அந்தப் படிக்கட்டுக்களுக்கு நீவப்ரதானம் செய்யவும், விக்ரஹ ப்ரதிஷ்டைக்கும் பரசுராமர் வந்து சேருவார். தேவ சில்பி விச்வகர்மா கட்டிட வேலைகளை நோக்கிக் கொள்வார். யோக பட்டாஞ்சிதமான தவநிலையில் உள்ள என்னைப் போற்றி வணங்குபவர்கள் நற்கதி பெறுவர். ஸத்ய தர்மங்களைக்

காவல் தெய்வங்களாகக் கொண்டு சபரிமலையில் உன்னால் கட்டப்போகும் படிகளைக் கடந்து செல்வோரின் விரத நியமங்களுக்குத் தகுந்தபடிகள் பலாபன்களை அத்தெய்வங்கள் அள்ளித் தருவர். அதேபோல் நியமமில்லாமல் அந்தப்படிகள் மீதேறுவோரை அவர்களே கவனித்துக் கொள்வார்கள். என்னைத் தூற்றுவோரைக் கூட நான் மன்னித்து விடுவேன். ஆனால் என் முன்னால் படிகள் உருவில் படுத்து கிடக்கும் தேவதைகள் வெகுண்டால் அவர்களைச் சாந்தப்படுத்த என்னால் கூட இயலாது. ஆகையால் எவன் ஒருவன் மண்டலகால நியமதிஷ்டையுடன், பிரம்மச்சரியம் காத்து, புலன் ஐந்து பொறி ஐந்து, கோசங்கள் ஐந்து, இவற்றுடன் மும்மலங்களையும் கூட்டி இந்தப் பதினெட்டு கரணங்களை அடக்கி எவனொருவன் முறையாக அந்தப் படிகளைக் கடந்து வந்து என்னைச் சரணடைகின்றாளோ அவன் முக்தி என்னும் வீடுபேற்றை அடைவான். "தத்வமஸி" "அஹம்ப்ரம்மாஸ்மி" "அஹமர்த்மா ப்ரஹ்மா" என்ற வேதப் பிரமாண வசனங்களைத் தியானித்து இருப்பின் உள்ளம் எனது கோயிலாகும். எனது சக்தியே இவ்வுலகனைத் திலும் வியாபித்துள்ளது. உயிர்களின் உடலே எனது ஆலயம். அவைகளை அசைந்தாட வைக்கும் உயிரே எனது விக்ரஹம், இவற்றை கவனமாக மனதில் கொண்டு கடமையாற்றுங்கள்" என்று கூறினார். இந்த சமயம் 18 படிகளாக இருந்த தேவதைகள் ஐயப்பனை நோக்கி, "அகிலாண்ட கோடி நாயகா கடவுள் அவதாரமாகிய தங்கள் கால்கள் எங்கள் மீது படலாம். ஆனால் மானிடர்களின் கால்கள் எங்கள் மீது படலாமா? என கேட்டனர். அதற்கு ஐயப்பன் 'தத்சமனகா' (அம்மத்சமானகா) அதாவது உண்மையாக 41 நாட்கள் விரதமிருந்து என்னை பூஜித்து, காட்டிலும், மேட்டிலும் கடந்து வந்து இருமுடியோடு படியேறும் பக்தன் எனக்கு சமமானவன். ஆகவே அவனும் தங்களை மிதித்து படியேறலாம்" எனக் கூறினார். கண் விழித்த மன்னன் தான் அஹக்கண்ணால் கண்ட பொன்னம்பலத்தின் சாயலிலேயே நாம் இப்பொழுது காணும் சபரிமலைக் கோயிலைக் கட்டினான்.

நாலாள் உயரத்தில் கருங்கல்லால் கோயில் கட்டி, உள்ளே சதுரமான சுற்றுப் பிரகாரத்துடன், கொடிய வனவிலங்குகள் எளிதில் உட்புக முடியாவண்ணம் அமைந்ததும், நடுவில் சதுரமான கர்ப்ப கோயிலும், அதன் முன்பாக அர்த்த மண்டபமும், மடைப்பள்ளியும் கொடி மரமும் கூடியது தான் ஐயனின் திருக்கோயில். இதை நாலம்பலம் என்றும் கூறுவர். கணபதி, ஸர்ப்பராஜாவின் ஸ்ன்னிதிகளும் இதற்குள் அடங்கும். பதினெட்டாம்படி மிகவும் புனிதமானதும் முக்கியமானதுமானதாகவும். இக்கோயிலில் கருப்பஸ்வாமி கருப்பாயி அம்மா காவல் தெய்வங்களாய் வாள் ஏந்தி இங்கு காவல் காத்து வருகின்றனர். மனதில் பக்தி இன்றி , நியம நிஷ்டைகள் குறைவாக வரும் பக்தர்களை அந்தப் பதினெட்டு தேவதைகள் மீது கால் வைக்க அனுமதிக்காமல் இக்காவல் தெய்வங்கள் துன்பப்படுத்துவார்கள் என்பது ஆன்றோர் கருத்து. தமது யாத்திரையில் ஏறும்போது ஒரு முறையும், தரிசனம், நெய்யபிஷேகம், ஏனைய வழிபாடுகள் முடிந்து விடைபெறும்போது இறங்குவறத்கு ஒருமுறையும் மாத்திரம் தான் இந்தப் படிகளை உபயோகிக்க வேண்டும். ஏறும்போதும், இறங்கும்போதும் இந்த தேவைகளுக்கு தேங்காய் உடைக்க வேண்டும் என்பது பொதுவிதி. இதற்கு யாரும் விலக்கு அல்ல சிலர் இருமுடி இல்லாமலும் மண்டல கால விரதக் குறைவாகவும், இப்படிகளின் மகிமை தெரியாமலும் ஏறிவிடுகின்றனர். அதனுடைய முழு பரிணாமம் அவர்களுக்கு அன்றே புலப்படாவிடினும், காலம் அவர்களுக்கு அதை உணர்த்தும் என்பதில் ஐயம் இல்லை. இப்பேர்ப்பட்டோர் அந்தப் படிகளின் மீதேறுவதுதான் அதனுடைய புனிதம் கெடாமல் இருப்பதற்கும், நெறியாக, முறையாக ஏறுவோருக்கு நற்பலன்களைத் தர, அந்தப் படிகளுக்குச் சக்தி கூடவும், இக்கோயில் திறக்கும் ஒவ்வொரு மாதமும் 4 நாளும் 'படிபூஜை' விமரிசையாக 'தந்திர' முறையில் படிகளுக்கு பூஜை செய்து அதன் புனிதத் தன்மையையும், மகிமைகளையும் புனருத்தாரணம் செய்கின்றனர். இதை சபரிமலை தேவஸ்தானத்தார் ஒரு புனிதச் சடங்காகவே கருதி ஏற்று நடத்தி வருகின்றனர். சபரிமலையின் முக்கிய தந்திரி இதை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளார். வம்சாவளியாக

அவர்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் இந்தக் கலையைத் தங்கள் கடமையாகவே கருதி, மிகுந்த பயபக்தியுடன் ஒவ்வொரு படிக்கட்டின் தேவனையும் தனித்தனியாக விளித்து, தியானம், ஆவாஹனம் என்று சடோசோபசரா பூஜைகளும் செய்து, விஸர்ஹனம் செய்து அதன் புனிதத் தன்மையை இன்றளவும் பாதுகாத்து வருகின்றனர். அதனால் முறையாக விரதமிருந்து இந்த படிகளைக் கடந்து செல்வோருக்கு நற்பலன்கள் கிடைக்கின்றது. அப்படி அல்லாமல் படி ஏறுவோரை கருப்பஸ்வாமியும், கடுத்தஸ்வாமியும் பார்த்துக் கொள்வார்கள்.

பிரம்மஸ்ரீ கண்டரு ராஜீவரு தந்திரி (சபரிமலை தந்திரி) இப்புத்தக ஆசிரியருக்கு கொடுத்த பேட்டியில் சபரிமலை அதன் சுற்றியுள்ள 18 மலைகளில் வசிக்கும் தேவதைகளே 18 படிகளில் இருக்கின்றனர். அந்த மலைகள் :

1. தலைப்பாறை மலை 2. காளகெட்டி மலை 3. புதுச்சேரிமலை 4. கரிமலை 5. இஞ்சிப்பாறை மலை 6. நிலக்கல் 7. தேவர்மலை 8. ஸ்ரீபாதமலை9. வட்டமலை 10. சுந்தரமலை 11. நாகமலை 12. நீலிமலை 13. சபரிமலை 14. மயிலாடும் மலை 15. மதங்கமலை 16. சிற்றம்பலமலை 17. கவுண்டன்மலை 18. பொன்னம்பலமேடு (காந்தமலை) என்று தெரிவித்தார்.

அவதார புருஷனான "பரசுராமர" இந்த சபரிமலைத் தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்ததோடல்லாமல், ஸன்னிதானம் முன்பாக ஒரே கருங்கல்லில் 18 படிகளையும் செதுக்கச் செய்து பொன்னம்பலத்தில் படிகளாயப் படுத்திருக்கும் தேவர்களின் அம்சத்தை அந்த கருங்கல்படிகளில் ஆவாஹனம் செய்து பூஜை ஏற்கும் தகுதியையும் ஏற்படுத்தினார்.

கோடான கோடி மக்கள் நடமாட்டத்தினாலும், அவர்களால் உடைக்கப்பட்ட தேங்காய்களாலும் அப்படிகள் சிதிலமடைய ஆரம்பித்து,

அதனால் அவற்றை நீக்கி புதிய கருங்கல் படிகளை கட்டுவிக்கலாமா? என்று கேரள ஆசாரப்படி நீக்கி புதிய கருங்கல் படிகளை கட்டுவிக்கலாமா? என்று கேரள ஆசாரப்படி தேவப் ரசன்னத்தில் கேட்டபோது, அப்படிகள் சிதிலடைந்தாலும் அதனுடைய புனிதம் இம்மியும் குறையவில்லை! என்று பதில் வந்ததாம். கேரளத்தோர் தேவ வாக்காகவோ எண்ணும் இந்த தேவப்ரசன்னம் பிரபல ஜோதிட வல்லுனரான இடவட்டம் பரமேச்வர மேனோன் அவர்களின் தலைமையில் பதினெட்டாம் படிக்கு முன்னால் நடைபெற்றது. அதன் பிறகு பெரியோர் பலர்கூடி என்ன செய்யலாம் என ஆலோசித்து, பதினெட்டாம் படிக்கு கனமான பஞ்சலோக கவசம் செய்து பூட்டலாம் என் நிர்ணயித்தனர்.

மேற் குறிப்பிட்ட பொதுக் கூட்டம், திரு.கூ.பாஸ்கரன் நாயரைத் தலைவராகக் கொண்ட திருவதாங்கூர் தேவஸ்தம் போர்ட் காலத்தில் நடந்தது. பிறகு அத்திருப்பணி ஒரு டெண்டர் மூலம் அப்பொழுதைய பிரபல வெங்கல வியாபாரியும், அய்யப்பன் பால் அளவுமிகுந்த பக்தி கொண்டவருமான திரு.பி.மாதவன் நம்பி அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

பதினெட்டாம்படிக்கு கவசம் பூட்டுவதற்காக திருவிதாங்கூர் தேவஸபுவத்தார் பத்து கிலோ தங்கம், முப்பது கிலோ வெள்ளி மற்றும் பித்தளை, செம்பு, ஈயம் போன்ற நாலாயிரம் கிலோ கிராம் சேர்த்து ஐந்தடி நீளம், ஒன்பது அங்குல அகலப்படிகள், ஒன்றரை அங்குல கனத்தில் தயாரித்த தகடுகளை ஒவ்வொரு படிகளின் மேலும் பக்கவாட்டிலும் பொருத்தி அந்தப் படிகளின் மேல் பொருத்தியுள்ளனர்.

கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்திலுள்ள கரமனையிலிருக்கும் மோகளவிலாஸம் தொழிற்சாலையில் திரு.மாதவன் நம்பி மற்றும் அவரது புதல்வரான திரு.கோமளகுமார் அவர்களது நேரடிப் பார்வையில் மேற்குறிப்பிட்ட திருப்பணி நடந்தது. பிறகு 1985 அக்டோபர் 26ம் நாள் செங்கன்னூர் தந்திரி தாழமன் மடத்தில் ஸ்ரீ கண்டராரு, ஸ்ரீ கிருஷ்ணராரு, ஸ்ரீ மஹேச்வராரு போன்ற முக்கிய தாந்த்ர பூஜாரிகள் தமது

தாந்த்ரீக பூஜையால் அத்தகடுகளுக்கு ஜீவோத்வாஸனம் செய்து அக்கோடபர் 30ம் நாள் அத்தகடுகளைச் சபரிமலைக்குக் கொண்டு வந்து பதினெட்டு கற்படிகளின் மேல் பூட்டி, சாக்ஷாத் பொன்னு பதினெட்டாம் படியாகச் செய்துள்ளனர்.

அன்றைய தினம் நல்லோர் பலர் கூடி வேத மந்திர தந்திரங்களால் அப்பொன் படிகளுக்கு விசேஷ பூஜைகள் செய்து இனிமேல் இப்படிகளின் மேல் எவரும் தேங்காய்களை உடைக்கக் கூடாதென தீர்மானத்தையும் கொண்டு வந்தனர். வழக்கமாக பொன்னம்பலத்திலுள்ள பொன்படிகளை மனதில் எண்ணியபடி மலையேறும் பக்தர்களுக்கு அவ்வருடம் அதாவது 1985 நவம்பர் 17 மண்டல பூஜைக்கு சபரிமலை வந்தபோது உண்மையிலேயே அங்கு பொன்னு பதினெட்டாம் படிகள் மின்னின.

அப்பேற்பட்ட மஹிமை வாய்ந்த படிகளின் தெய்வீகத் தன்மையை காப்பாற்றவும், முறையாக விரதமிருந்து மலை ஏறுவோர் நற்பலன்களைப் பெறவும். நியமநிஷ்டைகளிற் கவனமின்றி, படிகளின் பெருமையை உணராமல் அறியாமையால், இப்படிகளைக் கடப்போரினால் ஏற்படும் அபச்சாரத்திற்குப் பரிகாரமாகவும் வருடத்தில் ஒவ்வொரு மாத முதல் நாளும் படி பூஜை என்ற பெயரில் இந்தப் படிகளில் வீற்றிருக்கும் ஒவ்வொரு தேவதைக்கும் தனித்தனியாக தியானம், ஆவாஹனம் என்ற ஷோடசோபசார பூஜையும் செய்து அதன் புனிதத் தன்மையை இன்றளவும் காத்து வருகின்றனர். ஆகையால் தான் பாரத்திலுள்ள வேறெந்த இந்துக் கோவில்களுக்கும் தரப்படாத படிக்கெட்டு மரியாதையும் உலோகங்கள் சிறப்பும் இச்சபரிமலையிலுள்ள இப்படிகளுக்குக் கிடைத்துள்ளது.

# 14. பதினெட்டப் படிகள் போதிப்பவை?

சபரிமலை யாத்திரைக்கு மாலை அணிய விரும்பும் பக்தர்கள் முன்கூட்டியே தமது விரத நாட்களைக் கணக்கிட்டு தாம் பதினெட்டாம்படி மீது கால் வைக்கும் நாள் 41 நாட்கள் விரதம் முடிந்திருக்கும்படி கவனித்து மாலையணிந்து, மலை ஏறி பதினெட்டு தேவதைகளின் மீது கால் வைத்து ஏறுகின்றோம் என்ற பயபக்தியுடன் அப்படிகளைக் கடந்து பரமனை தரிசித்து வரும் பக்தர்களுக்கு ஸகல நலன்களும் சித்திக்கும் என்பது ஆன்றோர் வாக்கு.

இந்திரியங்கள் ஐந்து, புலன்கள் ஐந்து, கோசங்கள் ஐந்து, குணங்கள் மூன்று.

இந்திரியங்கள் : கண், காது, மூக்கு, நாக்கு, கைகால்கள்.

புலன்கள் ஐந்து : பார்த்தல், கேட்டல், சுவாசித்தல், ருசித்தல், ஸ்பர்சித்தல்.

கோசங்கள் ஐந்து : அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், ஞானமயகோசம், ஆனந்தமய கோசம்.

குண்ங்கள் மூன்று : ஸத்வகுணம், ரஜோ குணம், தமோ குணம்.

மேற் கூறிய பதினெட்டையும் ஜெயித்து அல்லது கட்டுப்படுத்த இந்த பதினெட்டுப் படிகளைக் கடப்பவர்களுக்கு மட்டுமே இதன் உட்பொருள் புலப்படும். "எல்லாம் ஒன்றே, அந்த ஒன்றின்றி வேறில்லை" என்பதை உணரச் செய்யும் ஸத் அல்லது ஆன்மா, அல்லது பரப்ரம்மம் என்ற தெய்வ ஸாக்ஷாத்காரம் இதுதான் ஸ்ரீ அய்யப்பன் கோவில் முன்வசமுள்ள பதினெட்டுப் படிகள் போதிக்கும் தத்துவம். இவற்றைக் கடந்ததும் : "தத்வமஸி" வாக்கியத்தை விளக்கும் வண்ணம் நித்தியனாய், சத்தியனாய், சாகவதனாய், ஸச்சிதானந்த ரூபனாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றான் ஸ்வாமி அய்யப்பன்.

முன் ஜென்ம வாசனைகளுக்கொப்ப, பிறவி முதலே இயற்கையாகவே காமக்ரோத்தங்கள் எனப்படும் 18 துர்க்குணங்களுடன் பிறக்கும் மனிதர்கள், இப்பிறவியிலும் தொடர்ந்து பாவச் செயல்களைப் புரிந்து தங்கொணா பாவச் சுமைகளைத் தாங்கி நிற்கின்றனர்.

அப்பேற்பட்டவர்கள் வருடந்தோறும் முறையாக மாலை அணிந்து, விரதமேற்கொண்டு, மண்டலகால நிஷ்டையுடன் சபரிமலை வந்து, இந்தப் புண்ணிய பதினெட்டாம் படிகளைக் கடக்கும்போது, ஒவ்வொரு துர்குணங்களாக நீங்கி , ஒவ்வொரு 'சித்தி' களாக மிகுந்து, தொடர்ந்து பதினெட்டு வருடங்கள் யாத்திரை செய்தவர்கள் ஸித்தபுருஷர்களாய் மேம்பட்ட நிலைக்கு உந்தப்பட்டு, தெய்வத்திற்கு நிகராக போற்றப்படுவார்கள் என்பது தொன்று தொட்டுவரும் சபரிமலை பக்தர்களின் நம்பிக்கை.

## 15. நெய் தேங்காய் தத்துவம்

தேங்காய் மனிதனின் உருவமாகும். தேங்காயிலிருக்கும் மூன்று கண்களில் இரண்டு பொய்யானவை. ஒன்றுதான் மெய்யானது. அதேபோல் மனிதனுக்கு இருக்கும் இரு கண்களும் பொய் தோற்றத்தையே காண்கிறது. உண்மையை அறியக் கூடியது அகக் கண் ஒன்றுதான். மனிதனின் மூன்றாவது விழி மெய்ஞ்ஞான விழியாகும்.

ஆலய வழிபாடு செய்கிறவர்கள் வெறும் கையுடன் கோவிலுக்குச் செல்வதில்லை. தேங்காய், பழம் முதலியவற்றுடன் செல்வது பழக்கமாக உள்ளது. இறைவனுடைய பூஜையில் தேங்காய் சிறப்பாக இருப்பதற்குக் காரணம் உண்டு. குடும்ப ரூபத்தில் (கலசம்) தெய்வத்தை வைத்து ஆராதிக்கும்போது அவருடைய சிரஸாகத் தேங்காயை வைத்து பூஜிப்பதை பார்கிறோம். தேங்காய் முக்கண் உடையதால் அதை சிவன் அம்சமாகவும்,

தேங்காயின் மேல்பகுதியில் மூன்று கோடுகள் இருப்பதை விஷ்ணுவுக்குரிய நாமத்தையும் நினைவூட்டுகிறது. இவற்றால் தேங்காயனது சிவ, விஷ்ணு ஆராதனையில் வேறுபாடின்றி சிறப்பையும் சைவ, வைஷ்ணவ வழிபாட்டில் ஒற்றுமையும் இருப்பதைக் காட்டுகிறது.

ஐயப்பனுக்கு அபிஷேகப் பொருள்களில் மிகவும் முக்கியமானது பசுவின் நெய். இது அபிஷேகத்திற்குரியதாகும். "நெய் அபிஷேகப் பிரியனே" என்று கூறுவதும் அதைத்தான். மேலே கூறியது போல் தேங்காய் சிவ அம்சமாகவும், அதனுள் விடும் பசு நெய் அம்பிகை அருள் கலந்த விஷ்ணு அம்சமாகவும் (லக்ஷ்மி எப்போதும் விஷ்ணுவின் மார்பில் இருப்பவள்) இரண்டும் ஒன்று சேர்ந்த பின் ஹரிஹர அம்ஸம் என்றும் சொல்கிறார்கள். போற்றி வழிபடுகின்றோம்.

தேங்காயில் நெய் நிரப்பியபின் முத்திரையிட்டு இருமுடியில் வைத்துக் கட்டிக்கொண்டு சபரிமலைக்குச் சென்று 18 படிகள் ஏறி ஐயப்பன் சன்னிதானத்தில் நெய் தேங்காய் உடைத்து நெய் ஐயப்பனின் மேனியில் சமர்ப்பித்து முழுமையான சரணம் அடைய வேண்டும்.

நெய் அபிஷேகம் செய்த பின், அந் நெய் பிரசாதமாக கொடுக்கப்படும். இதற்கு ஈடு இணையுள்ள மருந்து எதுவுமே இல்லை. எப்படிப்பட்ட வியாதியோ, கெடுதலோ இருந்தாலும் ஐயப்பன் பெயரைச் (சரணம்) சொல்லி இதை உட்கொண்டால் குணமாகி சீர் பெற்றுவிடும் என்று அனுபவமுள்ள குருசாமிகளும், கோவில் நம்பூதிரிகளும் சொல்கிறார்கள். நெய் அபிஷேகம் செய்த பின் உடைத்த தேங்காய் உயிரற்ற உடலாகி விடுவதால் அந்த தேங்காயை ஐயனின் சன்னிதானத்தின் கீழே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் ஹோம குண்டலத்தில் எரிவார்கள். அதாவது நம்முடைய உயிரை (நெய்) அந்த இறைவனுக்கும், உயிரற்ற உடலை (உடைத்த தேங்காய்) நெருப்புக்கும் அர்ப்பணிக்கும் தத்துவம் தான் இதில் அடங்கி உள்ளது.

# 16. சபரிமலை சன்னதிகளை தெரிந்துகொள்வோம் வழிபடுவோம்

சபரிமலை செல்லும் பக்தர்கள் அதன் பயண நோக்கத்தையும், வழிபாடு தெய்வங்களின் சன்னதிகளையும் வழிபாட்டு முறைகளையும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

**1. எருமேலி**

தர்மசாஸ்தா சன்னதி (எருமேலி) அய்யப்ப பக்தர்கள் இச்சன்னதிகளில் அவசியம் பேட்டை துள்ள வேண்டும். மணிகண்டன் ராஜ சேகர மன்னன் ஆணைப்படி காட்டுக்கு வேட்டையாடச் சென்று வந்ததன் நினைவாக செய்யப்படுகிறது.

பேட்டை துள்ளல் என்பது மகிழ்ச்சியாக ஆடிப்பாடும் நடனம். பேட்டை துள்ளலின் போது "சாமி திந்தகத்தோம்" "ஐயப்ப திந்தகத்தோம்" என்று பாட வேண்டும். காணிக்கைகளை உண்டியலில் போட வேண்டும்.

**2. வாபர் சன்னதி**

இங்கும் பேட்டை துள்ள வேண்டும். இங்கு அவசியம் கற்பூரம் ஏற்றி வழிபட வேண்டும். இங்கிருந்து காளைக்கட்டி, பேரூர்தோடு, தாழ்வாரை, அழுதாநதி, அழுதைமேடு, கல்லிடும் குன்ற வழியாக இஞ்சிப்பாதையை அடைய வேண்டும். அங்குள்ள சாஸ்தா கோவிலில் வழிபட வேண்டும். கரிமலை பகவதி துர்க்கா தேவி சன்னதி, கொச்சுகடுத்த சுவாமி சன்னதிகளில் வழிபாடுகள் சரியாக செய்ய வேண்டும்.

**3. பம்பா நதி வழிபாடு**

பம்பை நதியில் பக்தியுடன் அய்யப்பனை நினைவில் கொண்டு நீராட வேண்டும். நீராடிய பின் குருதட்சணை, அன்னதானம், பம்பை விளக்கு ஆகிய சக்திக்குரிய பூஜைகளை நடத்த வேண்டும்.

**4. பம்பை - ஸ்ரீ ராமர் அனுமர் கோவில் வழிபாடு**

பம்பை நதிக்கரையில் உள்ள கணபதி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்ட பின் ஸ்ரீ ராமர் கோவிலிலும், ஸ்ரீ ஹனுமார் கோவிலிலும் வழிபட வேண்டும்.

**5. பந்தள ராஜவந்தனம்**

பம்பை நதிக்கரையில் உள்ள கணபதி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்ட பின் ஸ்ரீ ராமர் கோவிலும், ஸ்ரீ ஹனுமார் கோவிலும் வழிபடவேண்டும்.

**6. அப்பாச்சிக்குழி, இப்பாச்சிக் குழி**

அய்யப்ப சுவாமியின் முக்கியமான பூதகணமான கடுவரனால் துர்பூதங்களும், துர்வேதனங்களும் இங்கு அடக்கி வைக்கப்பட்டிருக் கின்றன. கன்னி சுவாமிகள் தங்கள் மூத்த குருஸ்வாமி ஆணைப்படி இந்த இடத்தில் அரிசி மாவு உருண்டையும், வெல்ல உருண்டைகளையும் இந்தக் குழியில் போட வேண்டும்.

**7. சபரி பீடம்**

சபரி பீடத்தில் அய்யப்ப பக்தர்கள் வலம் வந்து தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வந்தனம் செய்வது அவசியம்.

**8. சரஸ்குழி ஆல்துறை**

கன்னி சுவாமிகள் குருதட்சணை வழங்கிய பிறகு இந்த இடத்தல் சரக்கோல் குத்த வேண்டும்.

**9. நெய் அபிஷேகம்**

நெய் அபிஷேகம் ஸ்ரீ சன்னிதானத்தில் செய்ய வேண்டிய ஒன்றாகும். அய்யப்ப பக்தர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள நெய் தேங்காய்களை உடைத்து அதை சுவாமி அபிஷேகத்திற்கு கொடுக்க

வேண்டும். அபிஷேகம் செய்து கிடைக்கும் நெய்யை பிரசாதமாக உபயோகப்படுத்த வேண்டும்.

**10. கணபதி சுவாமி சன்னதி**

இங்கு ஒரு ஹோமகுண்டம் இருக்கும். இதில் நெய் தேங்காயின் ஒரு பங்கை போட வேண்டும்.

**11. சண்முக சுவாமி சன்னதி**

இதுவும் மகா கணபதி சன்னிதானத்தைப் போல சன்னதிக்குள் இருக்கிறது. இங்கு பன்னீர், சந்தனம், ஊதுபத்தி, கற்பூரம் முதலியவற்றை ஏற்றி வழிபட வேண்டும்.

**12. மாளிகைப்புறத்தம்மா**

மாளிகைப்புறத்தம்மா அய்யப்ப சக்தி ஸ்வரூபினி தேங்காய் உருட்டல் இந்த அம்மனுக்குரிய முக்கியமான வழிபாடு. இங்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலைப்பாக்கு முதலியவற்றை தேவியின் முன் வைக்க வேண்டும். இங்கு பிரசாதம் வாங்கிக் கொள்ளவும்.

**13. கருத்தசுவாமிகள்**

இந்த சுவாமிக்கு அவல், நெல்பொரி, வெல்லம், பழம், தேங்காய், வறுத்தபொடி முதலியவற்றை செலுத்தி வழிபாடு செய்ய வேண்டும்.

**14. கருப்பசுவாமிகள்**

இங்கு கற்கண்டு திராட்சைப்பழம், கற்பூரம் ஆகியவற்றை காணிக்கையாக வைத்து வழிபட வேண்டும்.

**15. நாகராஜ, நாகயஷியம்**

இங்கு மஞ்சள் பொடி, கற்பூரம் வைத்து வணங்க வேண்டும். பின் ஸர்ப்ப தோஷம் ஏற்பட்டால் இருக்க ஸர்ப்பப்பாட்டு பாட வேண்டும்.

**16. வாபர் சுவாமி**

இந்த சன்னதியில் வாசனை திரவியங்களான பன்னீர், ஊதுபத்தி, தேங்காய், நெல், மிளகு ஆகியவற்றை வைத்து வணங்க வேண்டும்.

# சபரிமலையில் வழிபாடு
# (நாம் செய்ய வேண்டியவைகள்)

1. பொன்னு பதினெட்டு படி நெருங்கியதும், படிக்கு வலதுபுறம் சுவற்றில் சிதறு தேங்காய் உடைக்க வேண்டும். உடன் நமது மனதில் ஐயனிடம் பிரார்த்திப்பதை மனதில் வேண்டிக் கொண்டு 18 படிகளையும் தொட்டு வணங்கிக் கொண்டே 18 படி ஏற வேண்டும்.

2. தீபஸ்தம்பம் (கொடி மரத்தை) வணங்கி பின் நிதானமாக வரிசையில் நின்று அகிலாண்ட கோடி நாயகன் ஐயன் ஐயப்பனை திவ்ய தரிசனம் செய்து மனமுருக வேண்ட வேண்டும். நமது குறைகளை கூறி நிவர்த்திக்க வேண்ட வேண்டும்.

3. சன்னிதானத்தின் மேலேயுள்ள கன்னிமூல கணபதியை வலம் வந்து கற்பூரம் ஏற்றி வணங்க வேண்டும்.

4. வேண்டுதல் இருந்தால் மணி கட்ட வேண்டும்.

5. கணபதி கோயிலுக்கு அருகில் உள்ள நாகராஜா (ஸ்ரீ சண்முக சுவாமி சன்னதியை) வணங்கி பன்னீர், சந்தனம், ஊதுபத்தி, கற்பூரம் போன்றவற்றை வைத்து சுவாமியை வணங்க வேண்டும்.

6. சன்னிதானத்திலிருந்தே நடைமேடை வழியாக மஞ்சமாதா கோயில் அடைந்து முதலில் கடுத்தசாமியை வணங்கி, அவல், நெல் பொரி, வெல்லம், பழம், தேங்காய், வறுத்த பொடி காணிக்கை இங்கு வைக்க வேண்டும். கருப்பசுவாமிக்கு திராட்சை, பழம், கற்கண்டு, கற்பூரம் காணிக்கை வைத்து வணங்க வேண்டும்.
7. சர்ப்ப தோஷம் சத்ரு தோஷம் ஏற்படாமல் இருக்க அங்குள்ள புள்ளுவன்களிடம் அமர்ந்து பாட்டு படிக்க வேண்டும்.
8. மணி மண்டபம் சுற்றி வந்து வணங்க வேண்டும்.

9. அடுத்த நாகராஜா, நாகயட்சி ஆகிய தெய்வங்களுக்கு கற்பூரம் கொளுத்தி வணங்க வேண்டும்.

10. நவக்கிரகங்கள் 9 முறை சுற்றி வந்து கற்பூரம் கொளுத்தி வணங்க வேண்டும்.

11. மலை தெய்வங்களை (காட்டு தேவதைகளை) மஞ்சள் பொடி தூவி வணங்கி வலம் வர வேண்டும்.

12. மஞ்சமாதா எழுந்தருளியுள்ள கோயிலை முழுத் தேங்காயை கீழே உருட்டி கோயிலை வலம் வர வேண்டும். இந்த மாளிகைப்புரத்தம்மா சன்னதியில் அம்மனுக்கு பட்டுத் துண்டு, மஞ்சள் பொடி, குங்குமம், வெற்றிலைபாக்கு வைத்து வணங்க வேண்டும். வணங்கிய பின் அம்மனை தொழுதபடியே முதுகை கோயில் பின்பக்கம் பார்த்த நிலையில் படி இறங்கி தங்குமிடம் செல்ல வேண்டும்.

13. வாபர் கோயிலில் சென்று நெல், மிளகு, ஊதுபத்தி வைத்து வணங்க வேண்டும். அவரவர் இருமுடி கட்டுப்பிரித்து குருசாமி மூலம் நெய் தேங்காய் உடைத்து மஞ்சமாதா கோயிலுக்கு அருகில் கிடைக்கும் நெய் அபிஷேக சீட்டு பெற்று, அய்யன் பூதநாதனுக்கு நம் நெய்யை அபிஷேகம் செய்து, தரும் நெய்யை பெற்று வரவேண்டும். டப்பாவில் நெய்யை அடைத்துக் கொள்ள வேண்டும்.

14. அரவணைப்பாயசம் அப்பம் வாங்கிக் கொள்ள வேண்டும்.

15. திரும்ப செல்லும்போது (அனுமதித்தால் 18 படி ஐயப்பனை பார்த்தபடி இறங்கலாம்) 18 படிக்கு அருகில் சிதறு தேங்காய் உடைக்க வேண்டும்.

16. ஓமகுண்டலத்தில் ஒரு தேங்காய் மூடி போட வேண்டும்.
17. பம்பை திரும்ப வேண்டும்.

# 18 படிகளின் மகத்துவம்

சபரிமலை யாத்திரைக்கு மாலை அணிந்து நாற்பத்தொன்று நாட்கள் நோன்பிருந்து இருமுடி சுமந்து, காட்டு வழியில் இரவு பகல் பாராமல் நடையாய் நடந்து, பம்பாஸ்னானம் செய்து, புனிதர்களாய் அய்யப்பதரிசனம் செய்யக் கிளம்பும் பக்தர்கள் சபரிமலைக் கோயிலின் முன்னால் காணப்படும் தெய்வாம்சம் நிரம்பிய பதினெட்டுப் படிகளின் மீது கால்வைத்துத் தாண்டியே அய்யனின் சன்னதியை அடைய வேண்டும். இந்த சபரிமலைப் பயணத்தின் தத்துவமனைத்தும் இந்தப் பதினெட்டுப் படிகளில் அடங்கியுள்ளதென்பது ஆன்றோர்வாக்கு.

"சத்தியம் காக்கும் சக்தியான பொன்னு பதினெட்டாம் படிகள்" என்ற அடைமொழியும் இந்த படிகளுக்கு உண்டு. இந்தப் படிகள் முறையாக சபரிமலை வருவோர்க்கு அரிய பல தத்துவங்களை போதிக்கும் படிகள். அப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்த படிகளைக் கடக்கும்போது அதன் மேன்மையை உணர்ந்து ஏறினால் யாத்திரை முழுமை பெறும் என்ற நோக்கில் கீழ்க் குறிப்பிட்டுள்ள விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

ஈசனுக்கு கைலாயம், மாலவனுக்கு வைகுண்டம், பிரம்மனுக்கு ஸ்தயலோகம், கண்ணனுக்கு கோகுலம் என்பது போல் பூதநாதனுக்குப் பொன்னம்பலம் என்பர்.

ஐயனின் புராணக்கூற்றுப்படி பூதநாதனான ஸ்ரீ தர்மசாஸ்தாவின் திருஅவதாரம் தான் அய்யப்பன் என்பது புலனாகிறது.

தாயான மஹாராணியின் பொய்யான தலைவலிக்கும் புலிப்பால் கொண்டு வர கானகம் வந்து, அங்கு நாதரதமுனிவர் மூலம் தனது அவதரா ரகசியத்தைக் கேட்டுணர்ந்து பல அரிய வரங்களை தனது தவ வலிமையால் பெற்று, தேவர்களின் எதிரியாய், அவர்களுக்கு பலவிதத்திலும் இன்னல்கள் புரிந்து வந்த கரம்பிகை என்ற அரக்கி மகிஷியை மாய்த்து தேவர்கள் துயர் தீர்த்ததால் அகமகிழ்ந்த இந்திரன்,

நன்றிக்கடனாக ரிஷிகளைக் கொண்டு அஞ்ஞானிகளின் கண்களில் படாவண்ணம் சபரிமலைக்கு நேர் எதிர் உள்ள காந்தமலை உச்சியில் பொன்மயமான நேர் எதிர் உள்ள காந்மலை உச்சியில் பொன்மயமான (அம்பலம்) கோயில் ஒன்றைக்கட்டி அதன் நடுமையத்தின் ஞானபீடம் என்ற சிம்மாசனத்தை ஏற்படுத்தி அய்யனை அதில் அமரக் கோரினான்.

யக்ஷ, கின்னர, கிம்புராதிகள் வாத்தியங்கள் முழக்க தேவ மடந்தையர், நாட்டியமாட முனிவர் வேதம் ஓத, தேவர்கள் ஜய சப்தம் செய்ய, அய்யனாய் - அப்பனாய், அய்யப்பனாய் அவதரித்த மணிகண்டன் ஞான பீடத்தில் அமர எழுந்தருளினார். பன்னிரெண்டு வயது பாலகனின் உருவில் நடந்து வரும் ஐயன், உயரமாக அமைந்திருக்கும் ஞானபீடத்தில் ஏறி அமர சிரமப்படக்கூடாதென்ற எண்ணத்தில் அங்கு கூடியிருந்த தேவர் கூட்டத்தில் பதினெட்டு தேவதைகள் கீழிருந்து பீடம் வரை படிகட்டுகள் போல் வரியையாகப் படுத்துக் கொண்டனர். பரம்பொருளான அய்யப்பன் அந்த பதினெட்டு தேவதைகளின் மேல் தனது மலர்ப்பாதம் வைத்து ஏறி, ஞானபீடத்தில் அமர்ந்து தேவர்களின் பூஜையை ஏற்றுக் கொண்டார். மானுடர்களுக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். அனுதினமும் காந்தமலை மீதுள்ள பொன்னம்பலத்தில் தேவர்கள் அய்யப்பனுக்கு காலை முதல் மாலை வரை பூஜை செய்த வண்ணம் இருப்பர். மாலையானதும் ஐயனுக்குத் தேவர்கள் கற்பூரஹாரத்தி காண்பிக்கும்போது அந்த ஒளி ஐயனின் மீதுபட்டு மின்னும். அந்த திவ்யப் பேரொளிதான் வருடா வருடம் தைப்பொங்கல் நாள், மாலையில் தென்படும் மகரஜோதி என்று கூறுவர்.

புலிவாகனனாய் ஐயன் பந்தளதேசம் வந்து, பந்தளத்தரசன் ராஜசேகரனுக்கு பூதநாத கீதையைப் போதித்து, அவனுடைய அகக் கண்ணைத்திறந்து, தான் யார் என்பதை உணர்த்தி, மன்னனது கடமையை உணர்த்தி "பம்பா" நதிக்கரையின் அருகிலுள்ள சபரிமலையில் தனக்கொரு ஆலயம் கட்டப்பணிந்து, அதுவரை தான் பொன்னம்பலத்தில் உரைவதாயும் கூறி, ஆலயம் அமைக்க வேண்டிய இலக்கை அம்பெய்து காட்டி அங்கிருந்து மறைந்தார்.

## விநாயகப் பெருமானின் அர்ச்சனைக்கு உகந்தது அறுகம்புல் அவரை அர்ச்சிக்க 21 எளிய நாமாவளிகள்

1. ஓம் கணபதியாய நம
2. ஓம் பாசாங்கு சதராய நம
3. ஓம் ஆகுவாஹனாய நம
4. ஓம் விநாயகாய நம
5. ஓம் ஈசபுத்ராய நம
6. ஓம் ஸர்வஸித்தி ப்ரதய நம
7. ஓம் ஏக தந்தாய நம
8. ஓம் இபவக்ராய நம
9. ஓம் மூஷிக வாஹனாய நம
10. ஓம் குமார குரவே நம
11. ஓம் கபிரவர்ணாய நம
12. ஓம் ப்ரூம் ஹசாரியனே நம
13. ஓம் மோதகஹஸ்தாய நம
14. ஓம் மோதகஹஸ்தாய நம
15. கஜநாஸிகாய நம
16. ஓம் கபித்த பலப்ரியாய நம
17. ஓம் கஜமுகாய நம
18. ஓம் ஸீப்ரஸன்னாய நம
19. ஓம் ஸீராக்ரஜாய நம
20. ஓம் உமா புத்ராய நம
21. ஓம் ஸ்கந்தப்ரியாய நம



உ
சிவமயம்
ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# பிள்ளையாராப்பா

கன்னிமூல கணபதியே பிள்ளையாரப்பா
ஈழத்துச் சபரியில் பிள்ளையாரப்பா
இன்பமெல்லாம் தந்தருள்வாய் பிள்ளையாரப்பா
ஈடிப்லாத் தெய்வமே பிள்ளையாரப்பா

அன்னை உமை கைதவழும் பிள்ளையாரப்பா
அன்னை பிதா உலகமெல்லாம் என் பிள்ளையாரப்பா
அரவணைக்கு அடியாருள்ளத்தில் பிள்ளையாரப்பா
அன்புடனே குடி கொள்வீர் பிள்ளையாரப்பா
சரணம் அப்பா சரணம் அப்பா பிள்ளையாரப்பா

ஆதிசிவன் இடப்புறத்தில் பிள்ளையாரப்பா
ஆதியாயக் கோயில் கொண்டீர் பிள்ளையாரப்பா
ஆறுமுகன் அண்ணனான பிள்ளையாரப்பா
ஆறுமூன்று படி மேலே கோயில் கொண்ட பிள்ளையாரப்பா
சரணமப்பா சரணமப்பா பிள்ளையாரப்பா

ஈழத்து சபரிமலையில் பிள்ளையாரப்பா
ஈர்ஒன்பது படி மேலே பிள்ளையாரப்பா
ஈழவூவர் வெள்ளிப் பிள்ளையாரப்பா
ஈரநெஞ்சம் கொண்டமர்ந்தீர் பிள்ளையாரப்பா
சரணமப்பா சரணமப்பா பிள்ளையாரப்பா



# குரு

ஓம் குருநாதா ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் குருநாதா
ஓம் குருநாதா சற்குருநாதா
ஓம் குருநாதா சதாசிவா
சரணம் சரணம் குருநாதா
ஓம் குருநாதா சாம்பசிவா
ஓம் குருநாதா சிவகுருநாதா
ஓம் குருநாதா ஸ்ரீ குருநாதா
ஓம் குருநாத ஜெயக் குருநாதா
சரணம் சரணம் குருநாதா
ஓம் குருநாதா சபரி நாதா
ஓம் குருநாதா மணிகண்டநாதா
ஓம் குருநாதா அரிகர குருநாதா
ஓம் குருநாதா ஈழத்து சபரிநாதா
சரணம் சரணம் குருநாதா

ஈழத்துச் சபரி மலை வாசனே வாவா
ஈழத்துச் சபரி மலை கணபதியே வாவா
ஈழத்து சபரிமலை பலமுருகனே வாவா
ஈழத்துசபரி மலைச் சபரீச னே வாவா
சரணம் சரணம் சபரீபா



## சிவன் பாடல்

ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய ஓம்
ஓம் சிவாய ஓம் சிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவாய நம ஓம்
சிவ சிவ அரகர சிவாய நம ஓம்
சரணம் சரணம் சிவாய நம ஓம்

கங்காதர சிவ சிவாய நம ஓம்
கயிலா சவாசா சிவாயநம ஓம்
ஹரஹர சிவசிவ சிவாயநம ஓம்
அரகர அரகர சிவசிவ சிவாயநம ஓம்
சரணம் சரணம் சிவாய நம ஓம்

அகில லோகநாதா சிவாயநம ஓம்
அம்பிகை நாதா சிவாயநம ஓம்
அம்மை அப்பரே சிவாயநம ஓம்
ஆதி சிவமே சிவாயநம ஓம்
சரணம் சரணம் சிவாய நம ஓம்

அல்லல் அறுப்பாய் சிவாயநம ஓம்
அவலம் தீர்ப்பாய் சிவாய நம ஓம்
அன்பைப் பொழிவாய் சிவாயநம ஓம்
அருளைத் தருவாய் சிவாயநம ஓம்
சரணம் சரணம் சிவாய நம ஓம்



## அம்மன் பாடல்
## மஞ்சமாதா

அம்மா தாயே மஞ்ச மாதா
அய்யப்பன் ஆலயத்தில் மஞ்சமாதா
அழகாகக் கோயில் கொண்டாய் மஞ்சமாதா
அற்புதத் தெய்வமானாய் மஞ்சர்மாதர்
சரணம் அம்மா சரணம் அம்மா மஞ்சமாதா

பூசை செய்தோம் பூசை செய்தோ மஞ்ச மாத
பூப்போன்ற மனம் உடையாய் மஞ்சமாதா
பூம்பொழில் சூழ் சபரிமலை மஞ்சமாதா
பூச்சொரிந்து பூசை செய்தோம் மஞ்சமாதா
சரணம் அம்மா சரணம் அம்மா மஞ்சமாதா

சரங்குத்தி ஆலிலே மஞ்ச மாதா
சரங்குத்தி வந்தோ மஞ்சமாதா
ஈர்ஒன்பது பரியானைப் பார்தா யோ மஞ்சமாதா
கன்னிச்சாமி கண்ணில் தெரிந்ததம்மா மஞ்சமாத
சரணம் அம்மா சரணம் அம்மா மஞ்சமாதா

சரண கோசம் கேட்கலையோ மஞ்சமாதா
கண் திறந்து பாரும்மம்மா மஞ்சமாதா
பன்னீரைந்து நாட்களாக மஞ்சமாதா
சரண கோசம் பொட்டு வந்தோமம்மா மஞ்சமாதா
சரணம் அம்மா சரணம் அம்மா மஞ்சமாதா



# முருகன்

ஆதிமுருகா சிவபாலமுருகா
சிவபாலமுருகா ஆறு மூன்று படிமீது பாலமுருகா
ஐயப்பன் வலப்புறத்தே பாலமுருகா
அழகாகக் கோயில்கொண்ட பாலமுருகன்
சரணம் சரணம் சிவபாலா.........

ஈழத்து சபரிமலையில் சரணகோசம் சரண கோசம்
சரணகோசம் கேட்டதுவோ பாலமுருகா
சபரீசன் அணைத்தானோ அழைத்தானோ பாலமுருகா
பாலமுருகா சிவபாலமுருகா ஆறுமுக வா அருள் முருகா
சரணம் சரணம் சிவபாலா.........

பச்சை மயில் மீது பறந்தோடி வந்தாயோ பாலமுருகா
குருசாமி மனதினிலே பாலமுருகா
குன்றத்துறைய மனம் தொடுத்தாயே பாலமுருகா
குறைகளை களைந்திடுவாய் பாலமுருகா
சரணம் சரணம் சிவபாலா

சரணம் ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா
ஆறுமுகன் தம்பியே சரணம் ஐயப்பா
ஆனைமுகன் தம்பியே சரணம் ஐயப்பா
ஈழத்துச் சபரீசனே சரணம் ஐயப்பா



# ஐயப்பன்

ஆதிசிவன் பாலகனே சரணம் ஐயப்பா
ஆதிமூல தேவனே சரணம் ஐயப்பா
ஆதிசக்தி பாலனே சரணம் ஐயப்பா
ஆதியான தெய்வமே சரணம் ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா

அரகரசிவ சிவ ஐயப்பா
ஆனந்த தேனே ஐயப்பா
ஆரதனை செய்கிதோம் ஐயப்பா
ஆதரித்து அழைத்திடையா ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா

சபரி வாழ்ந்த மலை சபரிமலை
சபரி மலையாம் சபரிமலை
சாஸ்தா வாழும் சபரிமலை
சாஸ்வதமானா சபரிமலை
சரணங்கள் கேட்கும் சபரிமலை சாமி சரணம் ஐயப்பா

ஐயன் மலை சபரி மலை
அரனின் மகனின் அழகு மலை
அன்னதானம் வழங்கும் மலை
அழகுக்கு அழகாம் சபரிமலை
அழகன் தேவன் உறையும் மலை
அசுரக் குணங்கள் அழிக்கும் மலை
அருளை அள்ளி வழங்கும் மலை சாமி சரணம் ஐயப்பா

ஈழத்து மண்ணில் சபரீசன்
ஈனத்தனங்களை களைந்திடுவான்
ஈழத்து மக்களின் இருப்பிடமாம்
ஈழத்து சபரீசன் வாழும் சபரிமலை
சபரி மலை சபரி மலை சபரி மலை

## சரணம் பொன்னையப்பா

அச்சங்கோயில் அரசே சரணம் பொன்னையப்பா
அன்னதான பிரபுவே பொன்னையப்பா
அருளே பொருளே சரணம் பொன்னையப்பா
அரிசுர சுதனே சரணம் பொன்னையப்பா

ஆலகாலநீல கண்டன் மகனே சரணம் பொன்னையப்பா
ஆதியே யோதியே சரணம் பொன்னையப்பா
ஆனந்த ரூபனே சரணம் பொன்னையப்பா
அரியங்காவு ஐயனே சரணம் பொன்னையப்பா

இணை இல்லாசனே சரணம் பொன்னையப்பா
இருமூர்த்தி மைந்தனே சரணம் பொன்னையப்பா
இருமுடிப் பிரியனே சரணம் பொன்னையப்பா
இரக்கம் மிகுந்தவனே சரணம் பொன்னையப்பா

ஈஸ்வரன் மகனே சரணம் பொன்னையப்பா
ஈடில்லாத தெய்வமே சரணம் பொன்னையப்பா
ஈழத்துச் சபரிமலையானோ சரணம் பொன்னையப்பா
ஈனத்தனம் போக்கிடடைய சரணம் பொன்னையப்பா

உத்தமனே சக்தியனே சரணம் பொன்னையப்பா
உண்மையை உணர்த்தியவளே சரணம் பொன்னையப்பா
உலகாளும் காவலனே சரணம் பொன்னையப்பா
உலகெல்லாம் கருங்காவி சரணம் பொன்னையப்பா

எங்கும் நிறைந்தவளே சரணம் பொன்னையப்பா
எல்லார்க்கும் தேவனே சரணம் பொன்னையப்பா
எரிமேலிவாசனே சரணம் பொன்னையப்பா
எங்கள் குளல தெய்வமே சரணம் பொன்னையப்பா

ஏகாந்த வாசனே சரணம் பொன்னையப்பா
ஏழைப் பங்காளனே சரணம் பொன்னையப்பா
ஏகாந்த மூர்த்தியே சரணம் பொன்னையப்பா
ஏற்றிவிடப்பா சரணம் பொன்னையப்பா

ஐயப்பனே மெய்யப்பனே சரணம் பொன்னையப்பா
ஐயனே என் ஐயனே சரணம் பொன்னையப்பா
ஐயம் தவிர்ப்பவனே சரணம் பொன்னையப்பா
ஐயப்பா தெய்வமே சரணம் பொன்னையப்பா

## ஐயனே வா வா

ஈழத்து சபரிமலையானே வா வா
ஈர்ஒன்பதடி இறங்கிவா வா வா
ஈழத்து சபரிமலைவாசனே சபரீசனே வா வா
கோண்டாவில் பதியை உயர்த்தியவனே வா வா
சாமிமார்கள் சலனம் போக்கிட வா வா...
சரணம் பொன்னையப்பா

சந்திரசேகரன் புத்திரனே சபரிமலை நாதனே வா வா
சபரிமலை நாதனே சரணகோசப் பிரியனே வா வா
கங்காதரன் புத்திரனே கதிரமலையா
கதிரமலையோன் சோதரனே சரணம் ஐயப்பா

பரமசிவன் பலகனே ஈழத்துச் சபரிமலை நாதனே
ஈர் ஒன்பது படி கொண்ட சபரீ மலைநாதா
சரண கோசம் கேட்கலையே சபரிநாதா
சரணமழை பொழிகிறார்கள் சாமிமார்கள்
சாமிமார்கள் அழைக்கிறார்கள் அழைக்கிறார்கள்
சாஸ்தாவின் நாமம் கூறி அழைக்கிறார்கள்
சாஸ்தாவே சரணமையப்பா சாமி சரணம் ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா

மாலை போடுவோம் மாலைபோடுவோம்
மாலை போடுவோம் கார்த்திகையில் மாலைபோடுவோம்
கருங்காவி கட்டிக்கிட்டு குருசாமி பாதம் தொட்டு
சாமி சரணம் சொல்லிக்கிட்டு ஐயன் நாம் சொல்லிகிட்டு
மாலை போடுவோம் மாலைபோடுவோம்

காலை மாலை நீராடி, சிவ சிவ என்று திருநீறு பூசுவோம்
காலை மாலை சரணங்கள் போடுவோம்
காலை மாலை கவசங்கள் பாடுவோம்
சாமி நாமம் நாவாரப்பாடுவோம்
சரண கோசம்போடு சலனமின்றி போடு
அலையும் மனத்தை அடக்கிவிடு
ஐயனே அடக்கிவிடு அடக்கிவிடு
மாலையின் புனிதம் காத்திடுவோம் காத்திடுவோம்.
சாமி சரணம் ஐயப்பா

## சிவமந்திரம்
## ஓம் நமச்சிவாய போற்றி

**(வெள்ளை அண்ண) கொடிகாமம் ந.லோகநாதன்(சாமி) அவர்கள் ஐயப்ப பக்தனாக இருக்கிறார்.**

**அவர் சிந்தனையில் தோன்றிய சிவமந்திரம்**

**(தமிழ் வடிவம்)**

| | | | |
|---|---|---|---|
| *1.* | ஓம் | சொக்கநாதா | போற்றி |
| *2.* | ஓம் | தில்லைநாதரே | போற்றி |
| *3.* | ஓம் | திருநீல கண்டரே | போற்றி |
| *4.* | ஓம் | உருத்திரரே | போற்றி |
| *5.* | ஓம் | சொர்ணலிங்கரே | போற்றி |
| *6.* | ஓம் | தென்னாடுடைய சிவனே | போற்றி |
| *7.* | ஓம் | ஜெய ஜெய சங்கரா | போற்றி |
| *8.* | ஓம் | பரமலிங்கமே | போற்றி |
| *9.* | ஓம் | ஆத்மலிங்கமே | போற்றி |
| *10.* | ஓம் | சிவலிங்கமே | போற்றி |
| *11.* | ஓம் | தர்மலிங்கமே | போற்றி |
| *12.* | ஓம் | பூதராயரே | போற்றி |
| *13.* | ஓம் | மகாலிங்கமே | போற்றி |
| *14.* | ஓம் | ராசலிங்கமே | போற்றி |
| *15.* | ஓம் | நாகலிங்கமே | போற்றி |
| *16.* | ஓம் | கனகலிங்கமே | போற்றி |
| *17.* | ஓம் | சுமுகலிங்கமே | போற்றி |
| *18.* | ஓம் | மலைவாசா | போற்றி |
| *19.* | ஓம் | உமாபதியே | போற்றி |
| *20.* | ஓம் | உமாமகேஸ்வரா | போற்றி |
| *21.* | ஓம் | ஆதிபரமேஸ்வரனே | போற்றி |
| *22.* | ஓம் | தயாளனே | போற்றி |
| *23.* | ஓம் | சண்முகலிங்கமே | போற்றி |
| *24.* | ஓம் | அழகு சடையனே | போற்றி |

25. ஓம் சடா சிவனே போற்றி
26. ஓம் முத்துலிங்கனே போற்றி
27. ஓம் சோதிலிங்கனே போற்றி
28. ஓம் அருமைநாயகரே போற்றி
29. ஓம் தில்லையம்பல நடராசா போற்றி
30. ஓம் லிங்கேஸ்வரனே போற்றி
31. ஓம் சிவலிங்கமூர்த்தியே போற்றி
32. ஓம் சிவசங்கரா போற்றி
33. ஓம் கேதாரேஸ்வரா போற்றி
34. ஓம் வேதநாயகா போற்றி
35. ஓம் ஈழத்து சிதம்பரநாதரே போற்றி
36. ஓம் தஞ்சைப் பெருவுடையரே போற்றி
37. ஓம் நடராஜரே போற்றி
38. ஓம் தோணியப்பரே போற்றி
39. ஓம் சிவ சொக்கநாதரே போற்றி
40. ஓம் கையிலே தீயை ஏந்தினாய் போற்றி
41. ஓம் சிவசக்தியாக வந்து சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தாய் போற்றி
42. ஓம் மாற்கண்டேயரை ஆட்கொண்டாய் போற்றி
43. ஓம் ஆலகாலனே போற்றி
44. ஓம் ஐயப்பனை தோற்றுவித்தாய் போற்றி
45. ஓம் நகுலேஸ்வரனே போற்றி
46. ஓம் சிதம்பர நாதனே போற்றி
47. ஓம் கெங்காதரனே போற்றி
48. ஓம் காசிநாதா போற்றி
49. ஓம் திருவண்ணாமலையானே போற்றி
50. ஓம் சிவசக்தியானாய் போற்றி
51. ஓம் பத்தருக்கு பத்தனே போற்றி

52. ஓம் குங்குலியக் கலைஞருக்கு காட்சி கொடுத்தாய் போற்றி
53. ஓம் பூதரசதயே போற்றி
54. ஓம் அசுரர்களிடம் இருந்து தேவர்களை காத்தாய் போற்றி
55. ஓம் திரிமலம் அழிப்பாய் போற்றி
56. ஓம் அகத்தியரை படைத்தாய் போற்றி
57. ஓம் கேது வழிபட்டு திருக்கேதீஸ்வரனாகினாய் போற்றி
58. ஓம் தருமமிக்க கச்சியருப்பருக்காக சபையில் தோன்றினாய் போற்றி
59. ஓம் கீரிமுகத்துடன் வந்த முனிவருக்கு மனிதமுகம் கொடுத்தாய் போற்றி
60. ஓம் ஜனகமகராஜனுக்கு வில்லினை கொடுத்தாய் போற்றி
61. ஓம் ராவணன் கைலாய மலையை அசைக்க கலால் அமர்த்தினாய் போற்றி
62. ஓம் திருநீலகண்டருக்கு திருவோடு கொடுத்தாய் போற்றி
63. ஓம் கைலாய மலையில் அமர்ந்தாய் போற்றி
64. ஓம் காரைக்கால் அம்மையாருக்கு முத்தியளித்தாய் போற்றி
65. ஓம் வீரபத்திரனாய் போற்றி
66. ஓம் உருத்திரரானாய் போற்றி
67. ஓம் கருப்பை உயிருக்கு உணவளித்தாய் போற்றி
68. ஓம் பேழையில் இருந்த எறும்புக்கு உணவளித்தாய் போற்றி
69. ஓம் கல்லுணி தேரைக்கு உணவளித்தாய் போற்றி
70. ஓம் அரக்கர்களை அழித்தாய் போற்றி
71. ஓம் ஐயனாரை தோற்றியோய் போற்றி
72. ஓம் ஐயப்பனை படைத்தாய் போற்றி
73. ஓம் ஐயப்பனின் பிணியை போக்கினாய் போற்றி
74. ஓம் நெற்றிக் கண்ணால் முருகனைப் கொடுத்தாய் போற்றி
75. ஓம் காலனை காலால் உதைத்தாய் போற்றி
76. ஓம் பிரகலாதனால் நரசிம்மனின் கோவத்தை தணித்தாய் போற்றி
77. ஓம் பிரம்மா, விஷ்ணுவை அடிமுடி தேடவைத்தாய் போற்றி

78. ஓம் சந்திரனை முடியில் தாங்கினாய் போற்றி
79. ஓம் ஆதியும் அந்தமும் ஆகினாய் போற்றி
80. ஓம் ஆதியும் அந்தமும் இல்லாதவனாகினாய் போற்றி
81. ஓம் சிவ நாராயணனாகினாய் போற்றி
82. ஓம் சிவ சக்தியானாய் போற்றி
83. ஓம் அர்த்தநாரீஸ்வரரானாய் போற்றி
84. ஓம் நீதி நிறுத்தியோய் போற்றி
85. ஓம் நரிகளை பரிகளாக்கினாய் போற்றி
86. ஓம் சுந்தரரை தடுத்தாட் கொடுத்தாய் போற்றி
87. ஓம் அப்பருக்கு காட்சி கொடுத்தாய் போற்றி
88. ஓம் பாணபத்தருக்காக இசை பாடினாய் போற்றி
89. ஓம் பிருங்கி முனிவருக்கு பொல்லு கொடுத்தாய் போற்றி
90. ஓம் மாம்பழத்தை விநாயருக்கு கொடுத்தாய் போற்றி
91. ஓம் மீனவப் பெண்ணை மண முடித்தாய் போற்றி
92. ஓம் தக்கனின் தலை கொய்வித்தாய் போற்றி
93. ஓம் சிலந்திக்கும் யானைக்கும் முத்திகொடுத்தாய் போற்றி
94. ஓம் வாரிக் கொடியில் மறைந்து வாரீஸ்வரரானாய் போற்றி
95. ஓம் கொக்கட்டி சோலையில் நந்திக்கு உயிர் கொடுத்தாய் போற்றி
96. ஓம் மகுடா சுரனுக்கு வரம் அளித்தாய் போற்றி
97. ஓம் பிள்ளைவரம் கேட்டவருக்கு பிள்ளையாய் தந்தாய் போற்றி
98. ஓம் காமதேவனை கண்ணால் எரித்தாய் போற்றி
99. ஓம் அரிச்சந்திரனுக்கு முத்தி கொடுத்தாய் போற்றி
100. ஓம் சிறுதொண்ட நாயனாருக்கு முத்தி கொடுத்தாய் போற்றி
101. ஓம் பட்டிணத்தாருக்கு முத்தி கொடுத்தாய் போற்றி
102. ஓம் கங்கையை சடாமுடியில் தாங்கினாய் போற்றி
103. ஓம் பாற்கடலில் வந்த விசத்தை பருகினாய் போற்றி
104. ஓம் பசுவுக்கும் புலிக்கும் முத்தி கொடுத்தாய் போற்றி
105. ஓம் பன்றிக்கு பால் கொடுத்தாய் போற்றி
106. ஓம் கல்யாணையை கரும்புதின்ன வைத்தாய் போற்றி
107. ஓம் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டாய் போற்றி
108. ஓம் பிள்ளை கறியை கேட்டு விளையாடினாய் போற்றி ஓம்

ஓம் நமச்சிவாய போற்றி............

ஓம் நமசிவாய போற்றி ஓம்

## கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா கோகுல ரமணா கோவிந்தா
ஜெய்ஹிந்தா ஜெய்ஹிந்தா ஜெய ஜெயராம ஜெய்ஹிந்தா

குழலிசையாலே கோவிந்தா மாடுகள் தன்னை கோவிந்தா
மேய்த்தவன் நீயே கோவிந்தா மாதவ ராஜா கோவிந்தா

வெண்ணெய் திருடிய கோவிந்தா மண்ணை உண்ட கோவிந்தா
கோபியருடனே கோவிந்தா மாதவ ராஜா ரமணா கோவிந்தா
(கோவிந்தா)

நச்சுப் பாம்பில் கோவிந்தா நடனம் புரியும் கோவிந்தா
நல்லவர் யார்க்கும் கோவிந்தா நலமே அருள்வாய் கோவிந்தா

பாண்டவர் துயரம் கோவிந்தா தீர்த்தவன் நீயே கோவிந்தா
திரளபதை மானம் கோவிந்தா காத்தவன் நீயே கோவிந்தா
(கோவிந்தா)

பாரதப் போரில் கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
கீதை கொடுத்த கோவிந்தா சிந்தை நிறைந்த கோவிந்தா

ராதா கிருஷ்ண கோவிந்தா ரகுபதி ராகவ கோவிந்தா
மாயக் கண்ணா கோவிந்தா மலரடி தொழுதோம் கோவிந்தா
(கோவிந்தா)

பாமா ருக்மணி கோவிந்தா பரந்தாமனே கோவிந்தா
சங்கு சக்கரம் கோவிந்தா சங்கடம் தீர்க்கும் கோவிந்தா

தேவகி மைந்தா கோவிந்தா திருவடி சரணம் கோவிந்தா
மீரா பாடிடும் கோவிந்தா கிருஷ்ண முகுந்தா கோவிந்தா
(கோவிந்தா)

நீலநிறமே கோவிந்தா நின் திருமேனி கோவிந்தா
நாராயணனே கோவிந்தா பாராயணமே கோவிந்தா
(கோவிந்தா)

## நாகராசா பாடல்

ஆடுராஜா பிரவு நாகராஜா எங்கள்
மணிகண்டன் பெயரைச் சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரவு நாகராஜா எங்கள்
சாஸ்தாவின் பெயரைச் சொல்லி பாடுராஜா

சரணகோசம் போட்டு வரும் பக்தரைப்பாரு
சந்நிதியை நாடி வரும் கூட்டத்தைப்பாரு
ஐயப்பனைப்பாடும் கன்னிச் சாமியைப்பாரு
கருணையுடன் வழிவிடுவார் நிச்சயம்பாரு (ஆடுராஜா)

## ஆஞ்சநேயர்

அஞ்சனை செல்வா போற்றி
அநும எம் ஐயா போற்றி
நெஞ்சினில் இராம நாமம்
நிறைந்திடும் நிமலாபோற்றி
சஞ்சலம் தவிர்ப்பாய் போற்றி
சற்குருநாதா போற்றி
தஞ்சமென்றடைந்த பேரை
முப்போதும் காப்பாய் போற்றி



அஞ்சனை மைந்தா போற்றி
அஞ்சினை வென்றாய் போற்றி
வெஞ்சினக் கதிர்பின் சென்று
முழு மறை உணர்ந்தாய் போற்றி
மஞ்சன மேனி ராமன்
மலர்ப்பாதம் மறவாய் போற்றி
எஞ்சலில் ஊழியெல்லாம் இன்றென
விருப்பாய் போற்றி!

ஜெய அனுமான் ஜெய அனுமான்
மாருதி ராய ஜெய அனுமான்
அஞ்சனை புத்ரா ஜெய அனுமான்
அதிபலவந்தா ஜெய அனுமான்
ராம தூதா ஜெய அனுமான்
ராம தாஸா ஜெய அனுமான்
வாயூ குமார ஜெய அனுமான்
வானர வீரா ஜெய அனுமான்
மஹனு பாவா ஜெய அனுமான்

உள்ளம் உருக விழிசெருக
உடலம் எங்கும் களிபரவ!
வள்ளல் நாம ஜெபத்தாலே
விழியும் கண்ணீர்த் துளிபெருக!
மெள்ள இருந்த பெருமானே
வேண்டித் தினமும் தொழுவேனே!
அள்ளி வழங்கி எனது குறை
அனைத்தும் தீராய் அனுமானே

பொறியும் புலனும் போனபடிப்
போகும் விலங்குச் சாதியிலே

தறியாததலையும் காற்றினுக்கே
தனயன் ஆனாய் மேருவிலே!
நெறியும் நிலையும் தவறாமல்
நின்றாய்! யார்பால் அதுகற்றாய்?
அறியேன் உன்போல் ஒருவனையே?
அருள்வாய் ஐயா அனுமானே!

படிகம் போலும் பால் போலும்
பாமா, உனது நிறம் விளங்கும்!
வெடிபோல், கொடை இடிபோல்
விம்மி உனது குரல் முழங்கும்
அடி - பாதாளம் அதன் கீழே!
அணிமா முடியோ விண்மேலே!
வடிவாய்க் காட்சி தருவோனே!
வணக்கம் வணக்கம் அனுமானே!

ஆயள் வளரும் உன்னாளே!
அழகும் வலிவும் உன்னாலே!
பாயும், நோயும், பல்பகையும்
பறந்து போகும் உன்னாலே
கோயில் எனது நெஞ்சகமாம்!
கூறும் கவிதை மந்திரமாம்!
தேயம் தழுவும் புகழோனே!
சித்தம் இரங்காய் அனுமானே!

அன்னை அருளால் இவ்வுலகில்
அழியதா திருக்கும் பெரியபதம்!
மன்னன் அருளல் அவ்வுலகில்
மலேரோன் நிகராய்ப் பிரம்மபதம்!
தன்னை நம்பும் அடியார்க்குத்
தலைமை தருதல் உனது குணம்!

## கறுப்பன் பாடல்

எங்க கருப்பசாமி - அவர் எங்க கருப்பசாமி
எங்க கருப்பசாமி - அவர் எங்க கருப்பசாமி
அக்னியில் பிறந்தவராம் அரனாரின் மைந்தன் அவன்
எங்க கருப்பசாமி - அவர் எங்க கருப்பசாமி
முன் கொண்டைக்காரன் அவர் முன்கோபக் காறனவன்

(எங்க கருப்ப)

சடைமுடி காரனவன் சாமிகளை காத்திடுவான்
சல்லடையை கட்டிவாறான் சாய்ந்த சாய்ந்ஆடிவாறான்

(எங்க கருப்ப)

வில்லுப்பாட்டு பாடி வாறான் விதவிதமாய்ஆடி வாறான்
பந்தம் கையில்பிடித்துவாறான்பாரிவேட்டைஆடிவாறான்

(எங்க கருப்ப)

அச்சங்கோயில் ஆண்டவர்க்கு எதிராக இருப்பவனாம்
18ஆம் படிகளுக்கு காவலாக இருப்பவனாம்

(எங்க கருப்ப)

கச்சைய கட்டி வாரான் கை அருவாள் காட்டி வாறான்
மீசைசை முறுக்கிவாரான்முச்சந்தியில்நடந்துவாறான்

(எங்க கருப்ப)

வில்லாளி வீரனுக்கும், வீரமணி கண்டனுக்கும்
இருமுடி சுமக்குபோது பாதுகாக்க வருபவராம்

(எங்க கருப்பா)

கற்பூர ஆழிமுன்னே கடவுளாக இருந்திடுவார் கருப்பு வேஷ்டி
கட்டிக்கிட்டு பாவங்களை போக்கிடுவார்

(எங்க கருப்ப)

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்பசாமி -ஏ-கருப்பசாமி
கறுத்தமேகம் போலேவாரான் கருப்பசாமிஅண்ணன் வாரான்
தம்பிவாரான் கருப்பசாமி-ஏ கருப்பசாமி விண்ணதிர மண்ணதிர
கருப்பசாமி

(கருப்பன்)

மலையாள தேசம்விட்டு கருப்பசாமி - ஏ... கருப்பசாமி
மாடன் மாடத்தியுடன் கறுப்பு சாமி
பிறந்தது எங்கே வளர்ந்தது எங்கே கறுப்பு சாமி
பேரும், ஊரும் சொல்லவரான் கருப்பசாமி

(கருப்பன்)

வில்லுப்பாட்டு பாடிவாரான் கருப்பசாமி - ஏ கருப்பசாமிவிதவிதமாய்
ஆடிவாரான் கருப்பசாமி
மந்தை வறந்தவண்டா கருப்பசாமி -ஏ-கருப்பசாமி
பூஜை கொண்டவண்டா கருப்பசாமி

(கருப்பன்)

ஈன இசக்கியுடன் கருப்பசாமி - ஏ - கருப்பசாமி
எழுந்தோடி வாராண்டா கருப்பசாமி

(கருப்பன்)

## வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| சமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமி சரணம் | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | சாமி சரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்குமெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குண்டும் குளியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குண்டும் குளியும் |
| தேகபலம்தா | பாதபலம்தா |
| பாதபலம்தா | தேகபலம்தா |
| ஏற்றிவிடப்பா | துக்கிவிடப்பா |
| துக்கிவிடப்பா | ஏற்றிவிடப்பா |
| தாங்கிவிடப்பா | ஏந்தி விடப்பா |
| ஏந்தி விடப்பா | தாங்கிவிடப்பா |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |

| | |
|---|---|
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| சுவாமிமாரே | ஐயப்பமாரே |
| தேவன்மாரே | தேவிமாரே |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியோ |
| இருமுடிகட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | இருமுடிகட்டு |
| யாரைக்கான | சாமியைக்கான |
| சாமியைக்கண்டால் | மோட்சம்கிட்டும். |
| எப்போகிட்டும் | இப்போகிட்டும் |
| எங்கேகிட்டும் | இங்கேகிட்டும் |
| சாமி சாமி ஐயப்போ | சரணம்சரணம்ஐயப்போ |
| சரணம் சரணம்ஐயப்போ | சாமிசாமிஐயோப்போ |
| சாமியப்பா | ஐயப்பா |
| சரணம்மப்பா | ஐயப்பா |
| வாரோம்மப்பா | ஐயப்பா |
| வந்தோமப்பா | ஐயப்பா |
| எங்களையப்பா | ஐயப்பா |
| எத்திவிடப்பா | ஐயப்பா |
| துக்கிவிடப்பா | ஐயப்பா |
| நாங்கள்ளப்பா | ஐயப்பா |
| ஏழைகளப்பா | ஐயப்பா |
| பால்அபிஷேகம் | சுவாமிக்கே |
| தேன்அபிஷேகம் | சுவாமிக்கே |
| நெய்அபிஷேகம் | சுவாமிக்கே |
| கற்பூரதீபம் | சுவாமிக்கே |
| முத்திரைத்தேங்காய் | சுவாமிக்கே |
| அவலும் மலரும் | சுவாமிக்கே |
| கதலிப்பழமும் | சுவாமிக்கே |
| காணிப்பொனும் | சுவாமிக்கே |

| | |
|---|---|
| கருடன்வருவது | சுவாமிக்கே |
| வில்லாளி வீரனே | வீரமணிகண்டனே |
| ராஜாதிராஜனே | ராஜகுமாரனே |
| பூலோகநாதனே | பூமிபிரபஞ்சனே |
| சுவாமியே | ஐயப்பா |
| மணிகண்டா | ஐயப்பா |
| மாமலைவாசா | ஐயப்பா |
| மோகினிசுதனே | ஐயப்பா |
| மோகனரூபா | ஐயப்பா |
| எங்களைக்காப்பாய் | ஐயப்பா |
| முன்னும்பின்னும் | ஐயப்பா |
| பின்னும்முன்னும் | ஐயப்பா |
| இடமும்வலமும் | ஐயப்பா |
| வலமும்இடமும் | ஐயப்பா |
| காத்துரட்சிக்கனும் | ஐயப்பா |

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா



# படிப்பாடல்கள்



ஒன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினொன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினான்காம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

## தீப மங்களம்

தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய சபரி சாஸ்தா நமோ நமோ
பூரணை புட்கலை நாத நமோ நமோ
அருள் தாராய் நமோ நமோ (தீப மங்கள)



# மங்களம்

சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையோனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயப்பனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்
வெற்றிதரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்
அச்சங்கோவில் அரசனுக்கும் ஆரியங்கா ஐயனுக்கும்
குளத்துப்புழை பாலனுக்கும் குழந்தை மணி கண்டனுக்கும்
எரிமேலி சாஸ்தாவுக்கும் என் குரு நாதனுக்கும்
கன்னிமூலை கணபதிக்கும் காவல்காக்கும் கருப்பனுக்கும்
நாக ராஜனுக்கும் மாளிகைபுரத்து மஞ்சமாதா தேவிக்கும்
வாவர் சுவாமிக்கும் வாமனன் மைந்தனுக்கும்
ஆதி சக்தி அம்பிகைக்கும் ஆனந்தகோடி மங்களம்
ஞானகீதம் ஏற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
மங்களம் ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமயமான பொன்னு பதினெட்டாம் படி மேல் வாழும். ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் சுவாமியே சரணம் ஐயப்பா. வில்லாலி வீரன் வீரமணி கண்டன் காசி, ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம், இலங்கை யாழ்நகர் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை , தென்மராட்சி சபரீசவாசம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சாமி யே சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்டசித்திகளை அடையுங்கள்.

## சாஸ்தா பஞ்ச ரத்னம்

ஒவ்வொரு ஸ்லோகத்தையும் கூறி "ஸ்வாமியே சரணம் ஐயப்பா" என்று சொல்லி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

மூஷி வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கன்னி மூல கணபதி
பகவானே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸூதம்
ஷிப்ர ப்ரசாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்

சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விகக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பஞ்சரத்னாத்யம் ஏதத்யோ
நித்ய சுத்தப்படேன் நரஹா!
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சஸ்தா வசதிமானசே!!
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாதா சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ
சுவாமியே சரணம் ஐயப்பா



# சபரிமலையில்
# ஐயப்பன் சன்னதி நடைசாத்தும் பாடல்

சரணம் ஐய்யப்பா ஸ்வாமி சரணம் ஐய்யப்பா
சரணம் ஐய்யப்பா ஸ்வாமி சரணம் ஐய்யப்பா (சரணம்)

ஹரிவராஸனம் சுவாமிவிச்வமோஹனம்
ஹரிததீச்வரா சுவாமி ஆராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் சுவாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம்)

சரணகீர்த்தனம் சுவாமி சக்தமானஸம்
பரணலோலுபம் சுவாமி நர்த்தனாலயம்
அருணாபாஸுரம் சுவாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம்)

பிரணய சத்யகா சுவாமி பிராண நாயகம்
பிரணத கல்பகம் சுவாமி சுப்ரபாஞ்சிதம்
பிரணவ மந்திரம் சுவாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம்)

துரகவாஹனம் சுவாமி சுந்தரானனம்
வரகதாயுகம் சுவாமி வேதவர்ணிதம்
குருக்ருபாகரம் சுவாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம்)

திரிபுவனார்ச்சிதம் சுவாமி தேவதாத்மகம்
திரிநயனப்ரபும் சுவாமி திவ்யதேசிகம்
திரிதசபூஜிதம் சுவாமி சிந்தித ப்ரதம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம்)

பவபயாபஹம் சுவாமி பாவுகாவஹம்
புவனமோஹனம் சுவாமி பூதிபூஷணம்
தவளவாஹனம் சுவாமி திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரண)

களம்ருதுஸ்மிதம் சுவாமி ஸௌந்தரானனம்
களபகோமளம் சுவாமி காத்ரமோஹனம்
களபகேஸரீ சுவாமி வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரண)

ச்ரிதஜனப்ரியம் சுவாமி சிந்திதப்ரதம்
சுருதிவிபூஷணம் சுவாமி ஸாது ஜீவனம்
சுருதிமனோஹரம் சுவாமி கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரண)





ஓம் சாமியே சரணம் ஐயப்பா
யாழ் நகரின் தங்க நகைகளின் சாம்ராஜ்யம்
சிறீ நத்தியா
நகைமாடம்
இல,01 கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்
இல,56 கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்



ஓம் சாமியே சரணம் ஐயப்பா
உங்கள் அனைத்து வகையான நகைத் தெரிவிற்கும்
மணி ஐயப்பா
நகைப் பூங்கா
அசல் 24 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்.
172/A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
A9 வீதி,
கந்தசுவாமி கோயில் முன்
கிளிநொச்சி.




ஓம் சாமியே சரணம் ஐயப்பா
சாரங்கா நகைமாடம்
(வெளிநாட்டு நாணய மாற்று சேவையை வழங்குபவர்கள்)
இல,157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


THANK YOU!
Sanjai Travels
Tours (Pvt) Ltd.
No.176A, Temple Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4713 | 077 5038925
QATAR


ஓம் சாமியே சரணம் ஐயப்பா
ராஜன் ரயர்கடை
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்
(ஈழத்து சபரிமலைக்கு அருகாமை)


ஓம் சாமியே சரணம் ஐயப்பா
அற்புதாஸ் களஞ்சியம்
Atputhas Stores
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.


ஓம் சாமியே சரணம் ஐயப்பா
இராஜபுரம்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
பட்டுச் சேலைகளின் சோலைவனம்
பெண்களுக்கான சாறி, சல்வார், ஆண்களுக்கான
சேட், ரெடிமேட் மற்றும்
சிறுவர்களுக்கான சகல ஆடைவகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்.
இல,105 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:-021222 6953

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# M.K.T. Traders

ஆலயங்களுக்குத் தேவையான தர்ப்பை
தொடர்பான பொருட்கள், அபிஷேகப் பொருட்கள் ,புதுமனைப்
புகுவிழாவிற்குத் தேவையான சகல பொருட்களும் விற்பனையாளர்.

**(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)**

புது வீதி, ஆறுகால்மடம்,யாழ்ப்பாணம்.
தொ.இல:0773357857

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# நீயூ ராஜ்குமார் ரேடர்ஸ்
# New Rajkumar Traders





**இல.45 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# சுரேஸ் மேட்டேர்ஸ் அன் என்சினியறிங்





A9 வீதி நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

# கரன் ரேடர்ஸ்





கண்டி வீதி, சாவகச்சேரி.



அச்சமைப்பு:-சத்தியா பிறிண்டேர்ஸ்,யாழ். Tel:-0771386661